தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 124 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (13.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 18, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

கமெண்ட் கந்தர்...

பிரச்சினைகளை தீர்க்கத்தானே ஜனாதிபதியா கோட்டாபயவ கொண்டுவந்தார் விமல்? இப்போ எலெக்சன் வச்சால் பிரச்சினை தீர்ந்திடுமெண்டு கதை விடுறார்...!

ஜனாதிபதி தேர்தலுக்கு முடிந்தால் செல்லுங்கள்!

ரணிலுக்கு விமல் சவால்

நா.திலுஷா

சௌபாக்கியத்தின் நோக்கு வேலைத்திட்டத்தை மீறி, தான் விரும்பியது போன்று பெரிய பெரிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை. அவர் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி மாத்திரமே. அதற்கு அப்பால், நாட்டிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்களை விற்பதற்கான ஆணையும் அவருக்கு இல்லை. அவ்வாறு பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்க முடியாவிட்டால் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ரணில் தயாராக வேண்டுமென்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் உத்தர லங்கா சபாவின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்தார். உத்தர லங்கா சபாவின் கேகாலை மாவட்ட கூட்டம் நேற்று முன்தினம் ருவான்வெல்ல என்.எம்.பெரேரா மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

» 02 பக்கம்

எகிறும் கால்நடை உயிரிழப்புகள்!

இரண்டாயிரத்தை அண்மித்த மரணங்கள்

நா.திலுஷா

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால், வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் உயிரிழந்துவரும் கால்நடைகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகின்றது. அதற்கமைய, நேற்று நண்பகல்வரை வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உயிரிழந்த கால்நடைகளின் எண்ணிக்கை இரண்டாயிரத்தை அண்மித்துள்ளதாக விவசாய அமைச்சின்...

» 02 பக்கம்

உஷ்

டலஸ் அணியின் முக்கிய எம்.பியான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இப்போதெல்லாம் கட்சி கூட்டங்களில் கலந்துகொள்வதை தவிர்த்து வருகிறாராம்.

பெரும்பாலும் அவர் தனது தாய்க்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு திரும்பக்கூடும் என்று உள்ளக செய்திகள் சொல்கின்றன. கடந்த சனிக்கிழமை அவர் ஜனாதிபதி ரணிலின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்தார்.

ஜனாதிபதி – தமிழ்த் தரப்புகள் சந்திப்பது தொடர்பில் செயற்பாட்டுப் பொறிமுறையை உருவாக்க முடிவு

யாழ். நிருபர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தரப்புகள் சந்திப்பது தொடர்பில் புத்திஜீவிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு செயற்பாட்டுப் பொறிமுறையை உருவாக்கி அதன்மூலம் ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடலில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

» 02 பக்கம்

யாழ் - பலாலி விமான சேவைகள் ஆரம்பம்

யாழ்.நிருபர்

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னைக்கான விமான சேவைகள் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின. இதன்படி அலையன்ஸ் எயார்லைன்ஸ்...

» 02 பக்கம்

புதிய ஆண்டில் நாடாளுமன்ற அமர்வு ஜனவரி 05ஆம் திகதி

இன்றைய தினம் நடைபெற இருக்கும் நாடாளுமன்ற அமர்வுகளின் பின்னர் புதிய வருடத்தின் நாடாளுமன்ற அமர்வை ஜனவரி 05ஆம் திகதி...

» 02 பக்கம்

வடக்கின் பொருளாதாரத்திற்கான சர்வதேச வாயில் மீண்டும் திறக்கப்பட்டமை மகிழ்ச்சி

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் வரவேற்பு

தொடர்ச்சியான பல்வேறு முயற்சிகளின் பலனாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பலாலிக்கான விமான சேவையை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்ட பலாலிக்கான...

» 02 பக்கம்

சனத் நிஷாந்தவுக்கு எதிராக விரைவில் குற்றப்பத்திரிகை

ஜனவரியில் தாக்கல்செய்ய நீதிமன்றம் பணிப்பு

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக ஜனவரி 17ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

» 02 பக்கம்

உள்ளூராட்சி தேர்தலை விரைவாக நடத்தக் கோரி எதிர்க்கட்சிகள் மனு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பல சுயேட்சை நாடாளுமன்ற உறுப்பினர்களினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

» 02 பக்கம்

ஒற்றையாட்சியின் கீழ் அர்த்தமுள்ள தீர்வில்லை!

சி.வி. சுட்டிக்காட்டு

"ஒற்றையாட்சியின் கீழான எந்த ஒரு தீர்வும் அர்த்தமுள்ள ஒரு தீர்வாக அமையாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்" என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை பற்றி கலந்துரையாடுவதற்காக...

» 02 பக்கம்

சீரற்ற காலநிலை தொடர்வதால் குழந்தைகளைக் கவனியுங்கள்!

வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா வேண்டுகோள்

கே.சுபானி

நாட்டில் தொடரும் கடும் குளிருடனான காலநிலை மற்றும் வளி மாசடைவு அதிகரிப்பு காரணமாக வைரஸ் காய்ச்சல், இதயம் மற்றும் சுவாசம் உள்ளிட்ட பல நோய்களால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொரளை,...

» 02 பக்கம்

டயனா கமகே எம்.பியின் பதவியை வறிதாக்கும் வழக்கு ஜனவரி 26இல்

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

» 02 பக்கம்

போதைப்பொருள் செயற்பாடுகளை இவ்வருடத்திற்குள் முடிவுறுத்துக!

இல்லையேல் பள்ளிவாசலுடன் உள்ள தொடர்பு நிறுத்தப்படும்

புதிய காத்தான்குடி ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் அறிவிப்பு

கனகராசா சரவணன்

காத்தான்குடியில் போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாவனையாளர்கள் எதிர்வரும் ஜனவரி...

» 02 பக்கம்

போதை மாத்திரைகளுடன் கேகாலையில் தாதி கைது

கே.சுபானி

கேகாலை பொது வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த தாதியொருவர் 40 போதை மாத்திரைகளுடன் கேகாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து கேகாலை பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

கைதுசெய்யப்பட்ட 58 வயதுடைய தாதி, கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரகம்மன பிரதேசத்தில் வசித்து வருவதுடன், கேகாலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றி வருகிறார்.

» 02 பக்கம்

இறைச்சிக் கடைகளுக்கு ஒரு வாரத்திற்கு பூட்டு!

கிழக்கு மாகாண ஆளுநர் உத்தரவு

பாரூக் ஷிஹான்

மட்டக்களப்பு அக்கரைப்பற்று முதல் கல்முனை மாநகரசபைகள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து இறைச்சி விற்பனை நிலையங்கள் மற்றும் இறைச்சிக் கடைகள் (கோழிக் கடைகள் தவிர) நேற்றுமுதல் ஒரு வாரத்திற்கு மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

» 02 பக்கம்

போசாக்கின்மையால் தோட்டப் பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஸ்டாலின் சுட்டிக்காட்டு

நோட்டன் பிரிட்ஜ் எம்.கிருஸ்ணா

நாடளாவிய ரீதியில் உள்ள மாணவர்களுக்கிடையே போசாக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் போசாக்கின்மையால்...

» 02 பக்கம்

எகிறும் கால்நடை...

கால்நடைப் பிரிவு நேற்று (12) அறிவித்தது.

இந்நிலையில், நாட்டில் நிலவும் அதிக குளிர் காலநிலையினால் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் உறுதிப்படுத்தப்படாத காரணங்களினால் கால்நடைகள் உயிரிழந்துவருவதால், குறிப்பாக மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சியை உணவுக்காக கொள்வனவு செய்வதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவ்வாறு இறைச்சி கொள்வனவு செய்வதானால் அனுமதி முத்திரை தொடர்பில் அவதானமாக செயற்படுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரிக்கை விடுத்தார்.

விவசாய அமைச்சின் கால்நடைப் பிரிவின் அறிவித்தலின் பிரகாரம், வடமாகாணத்தில் உயிரிழந்துள்ள கால்நடைகளில் 691 எருமைகளும், 296 ஆடுகளும் உள்ளடங்குகின்றன. மேலும், வடமாகாணத்தில் 329 கால்நடைகளின் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 182 மாடுகளும் 147 ஆடுகளும் உள்ளடங்குகின்றன.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 511 மாடுகள் உயிரிழந்துள்ளதுடன் 44 எருமைகளும் 108 ஆடுகளும் உயிரிழந்துள்ளன. அந்த மாகாணத்தில் மேலும் 15 மாடுகள் மற்றும் ஆடுகளின் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் கால்நடைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கால்நடைகளின் உயிரிழப்பு தொடர்பில் பிரேத பரிசோதனையை முன்னெடுத்து அறிக்கையை பெற்றுக்கொடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சின் செயலாளருக்கு பணிப்பு விடுத்துள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின தலைவர் உபுல் ரோஹண கருத்து வெளியிடுகையில்,

நாட்டில் தற்போது நிலவும் குளிர் காலநிலையினால், வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் உறுதிப்படுத்தப்படாத காரணங்களினால் மாடுகள் மற்றும் ஆடுகள் போன்ற கால்நடைகள் உயிரிழந்துவருகின்றன.

அதேபோன்று, கடந்த சில இரு தினங்களில் நாடு பூராகவுமுள்ள அநேகமான இறைச்சி சந்தைகள், கடைகள் மற்றும் இறைச்சி போக்குவரத்துகளை பரிசோதனைக்கு உட்படுத்தியிருந்தோம். இதன்போது, இத்தினங்களில் சந்தேகத்துக்கிடமான கைதுகளும், வழக்குப் பதிவுகளும் இடம்பெற்றிருந்தன.

அதனால், இனந்தெரியாத காரணங்களினால் உயிரிழக்கும் கால்நடைகளின் இறைச்சியை உணவுக்காக எடுப்பதால் ஆரோக்கியத்துக்கு ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. தொற்று நோய்கள் உருவாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இறைச்சி தொடர்பான பரிசோதனை முன்னெடுப்பவர்களினூடாக பரிசோதனைகளை முன்னெடுத்ததன் பின்னரான அனுமதிபெற்ற இறைச்சி என்ற முத்திரை பதிக்கப்படாவிட்டால் அல்லது குறித்த இறைச்சியில் முத்திரை இல்லாவிட்டால் அதனை கொள்வனவு செய்யாமலிருக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஏற்பட்ட அதிக குளிரினால் இந்த கால்நடைகள் சந்தேகத்துக்கிடமாக உயிரிழக்கின்றன. இருந்தபோதும், நாட்டின் ஏனைய பகுதிகளின் இதுபோன்ற சம்பவங்கள் உத்தியோகபூர்வமாக இதுவரையில் பதிவாகவில்லை. ஏனைய பிரதேசங்களிலும் குளிர் காலநிலை இருந்ததால் அங்குள்ள கால்நடைகளும் உயிரிழக்கலாம் என்று எதிர்பார்க்கிறோம்.

குறிப்பாக மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சியை மற்றும் ஏனைய இறைச்சிகளை கொள்வனவு செய்யும்போது மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய நம்பிக்கையுடைய இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் இறைச்சி கொள்வனவு செய்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். மேலும், இறைச்சி கொள்வனவு செய்வதானால், இறைச்சி பொதிகளில் ஏதாவதொரு இடத்தில் அனுமதிபெற்ற இறைச்சி என்று குறிப்பிட்டு முத்திரையொன்று பதிக்கப்பட்டிருக்கும். அந்த முத்திரை பதிக்கப்பட்ட இறைச்சியை மாத்திரமே கொள்வனவு செய்யவேண்டும்.

உயிரிழந்த கால்நடைகளை உணவாக எடுப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு வலியுறுத்துவதோடு, நாடு முழுவதும் பரிசோதனைகளையும் முன்னெடுத்து வருகிறோம். இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

உள்ளூராட்சி...

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, லக்ஷ்மன் கிரியெல்ல, அனுர பிரியதர்ஷன யாப்பா, ஜீ.எல்.பீரிஸ், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோர் இந்த மனுக்களை சமர்ப்பித்துள்ளனர்.

ஒற்றையாட்சியின் கீழ் ...

இன்று 13ஆம் திகதி சந்திப்பொன்றுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

ஒற்றையாட்சியின் கீழான எந்தவொரு தீர்வும் அர்த்தமுள்ள ஒரு தீர்வாக அமையாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

ஏற்கனவே அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாத நிலையில் இருக்கும் ஜனாதிபதி, அதிகாரப்பகிர்வு தொடர்பில் இந்த நாட்டில் நிரந்தர அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தும் வகையில் துணிச்சலானதும் சரியானதுமான ஒரு அணுகுமுறையை கையாள்வாரா என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லாத நிலையே இருக்கின்றது.

ஆனால், எது எவ்வாறாக இருந்தாலும், பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு முன்னோடியான இன்றைய பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதும், இந்த பேச்சுவார்த்தையின் கீழ் வரும் சில அடிப்படையான விடயங்களை வலியுறுத்துவதும் அவசியம் என்று கருதுகின்றேன்.

1. அர்த்தமுள்ள ஓர் அதிகாரப்பகிர்வுக்கான பேச்சுவார்த்தையை (ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி என்பதே எமது நிலைப்பாடு) நாம் வரவேற்கின்றோம்.

2. பேச்சுவார்த்தைக்காக 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம் என்பதை கடந்த கால வரலாறு உணர்த்துகின்றது.

3. மத்தியஸ்தம் வகிப்பதற்கு இந்தியாவுக்கு அழைப்பு விடுவிக்கப்பட வேண்டும்.

4. பேச்சுவார்த்தை ஒரு காலவரையறைக்குள் பேசி முடிக்கப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு முன்னதாக கடினமான நிபந்தனைகளை முன்வைத்து ஜனாதிபதியின் அழைப்பை நாம் கண்மூடித்தனமாக புறக்கணிப்பது பொறுப்புள்ள ஒரு செயலாக அமையாது.

அத்தகைய செயற்பாடு எமக்கான சர்வதேச ஆதரவையும் பெற்றுத்தராது. ஆனால், தீர்வு தொடர்பில் ஜனாதிபதி உண்மையான அக்கறையுடன் இருப்பாரானால், இந்திய மத்தியஸ்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அவர் இணங்கவேண்டும். இதனை நான் இன்றைய சந்திப்பில் வலியுறுத்துவேன். இந்த பேச்சுவார்த்தையில் ஏனைய எல்லா தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்து இந்தக் கருத்தை வலியுறுத்த வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருள்...

முதலாம் திகதிக்கு முன்னர் தங்களது செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். இல்லாத விடத்தில் அவர்களுக்கும் பள்ளிவாசலுக்கும் உள்ள தொடர்புகள் உட்பட்ட பல தொடர்புகள் நிறுத்தப்படுவதுடன், அவர்களில் ஒருவர் உயிரிழந்தால் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய பிரத்தியேக இடம் ஒதுக்கப்படும் போன்ற தீர்மானங்களை எடுத்துள்ளதாக நேற்று திங்கட்கிழமை (12) புதிய காத்தான்குடி அல்-அக்ஸா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் தலைவரும் வர்த்தக சங்கத் தலைவருமான கலந்தர்லெப்பை முகம்மட் பரீட் தெரிவித்தார்.

புதிய காத்தான்குடி அல்-அக்ஸா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் மாதாந்த கூட்டம் இடம்பெற்றபோது, போதைப் பொருளுக்கு அடிமைப்பட்ட மக்களை மீட்டெடுக்க சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் போதைப்பொருள் பயன்படுத்தும் மற்றும் வியாபாரம் செய்யும் இல்லங்களில் நடைபெறும் திருமணத்திற்கு பள்ளிவாசலினால் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப்படமாட்டாது.

அதேபோல் இல்லங்களில் நடைபெறும் ஜனாஸா கடமைகளுக்கு எமது பள்ளிவாசலினால் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப்படமாட்டாது என்பதுடன், அவர்களின் ஜனாஸாக்கள் எமது மையவாடியில் அவர்களுக்காக பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அடக்கம் செய்யப்படும்

அதேவேளை, போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் வியாபாரிகளின் பெயர் விபரங்கள் விளம்பரப்பலகை மூலம் காட்சிப்படுத்தப்படுவதுடன், போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் வியாபாரிகளின் விபரங்களை உயர் அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் வியாபாரிகளின் மஹல்லா உரிமம் இரத்துச்செய்யப்படும் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன். அந்த புதிய தீர்மானங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

எனவே, எதிர்வரும் 2023 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் போதைப்பொருள் பாவனையாள்கள், வியாபாரிகள் அதனை நிறுத்தவேண்டும். இந்தத் தீர்மானத்தை அதிகளவானோர் வரவேற்றுள்ளனர். இதனை ஏனைய பள்ளிவாசல்களும் கடைப்பிடித்தால் இந்த போதைப்பொருளை முற்றாக தடுக்கமுடியும் என அவர் தெரிவித்தார்.

புதிய ஆண்டில்...

நடத்துவதற்கு நேற்று (12) நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நேற்று (12) நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கமைய அன்றையதினம் மு.ப. 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன், மு.ப. 9.30 மணிமுதல் மு.ப. 10.30 மணிவரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப. 10.30 மணிமுதல் பி.ப 5.00 மணிவரையான காலப்பகுதி புனர்வாழ்வுப் பணியகச் சட்டமூலம் மற்றும் குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலம் ஆகியவற்றின் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதங்களை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இதன்பின்னர் பி.ப. 5.00 மணிமுதல் 5.30 மணிவரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்புவேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

அதேநேரம், முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய இன்றையதினம் (13) மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து, இதற்குப் பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதற்கான நாடாளுமன்ற விசேட குழுவை அமைப்பது மற்றும் இலங்கையிலுள்ள உயர் கல்வி வாய்ப்புகளை விஸ்தரிப்பது தொடர்பில் பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதற்கான நாடாளுமன்ற விசேட குழுவை அமைப்பது தொடர்பான பிரேரணைகள் சபையில் முன்வைக்கப்படவுள்ளன.

துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு இளைஞர் பிரதிநிதித்துவத்தைத் தெரிவுசெய்வது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. துறைசார் மேற்பார்வைக் குழுக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு ஆர்வமாகவுள்ள, அந்தந்தத் துறைகளில் நிபுணத்துவம் பெற்ற இளைஞர்கள் தொடர்பான தகவல் வங்கியொன்றை தயாரிக்க எதிர்பார்த்திருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இதற்காக இளைஞர் சமூகத்திலிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு மூன்று மொழிகளிலும் பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு இணக்கத்தைத் தெரிவித்ததாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட்ட பின்னர் குறித்த தகவல் வங்கியிலிருந்து இளைஞர்களை அழைப்பதற்கும் எதிர்பார்த்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு...

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

சீனா போன்ற நாடுகள் மீண்டும் நாட்டின் தலைவிதியை மாற்றியமைக்கவே முயற்சிக்கின்றன. எமது நாட்டில் ஒரு டொலரின் பெறுமதி 300 ரூபாவாகும். இந்தியாவில் ஒரு டொலருக்கு 80 ரூபாவே செலுத்தவேண்டும். இலங்கைக்குள் இந்திய ரூபாவை புழக்கத்துக்கு கொண்டுவருவதே இந்தியாவின் இலக்காகவுள்ளது. அவ்வாறு இந்திய ரூபா எமது நாட்டில் புழக்கத்துக்கு வருமாக இருந்தால் இரு நாட்டினதும் சுங்கப்பிரிவுகளையும் இலகுவாக இணைத்துவிடுவார்கள். அவ்வாறு நடந்தால் அரசியல் செயற்பாடுகளுக்கப்பால், பொருளாதார ரீதியில் நாங்கள் இந்தியாவின் ஒரு பிராந்தியமாக விடுவோம்.

எனவே, வயிற்றுப் பசியில் நாட்டிலுள்ள பிரச்சினைகளை மறக்கக்கூடிய நெருக்கடியானதொரு நிலைமையிலேயே நாம் இருக்கிறோம். எமது வயிற்றுப் பசி அதிகரிக்கும் சந்தர்ப்பத்திலேயே, இவர்கள் நாட்டிலுள்ள பிரச்சினைகளை உக்கிரப்படுத்துவதறகான செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள்.

இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கான வியாபாரப் பட்டியலை நிறைவேற்றவே ரணில் முயற்சிக்கிறார். இவ்வாறு சர்வதேச நாடுகளுக்காக பட்டியல்களை வைத்துக்கொண்டு இந்த நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியாது. அதற்காக சர்வதேச நாடுகளை எதிர்க்க வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. மற்றைய நாடுகளின் கொள்கைத்திட்டங்களை நிறைவேற்றும் நாடாக இருந்துவிடக்கூடாது என்றே கூறுகிறோம்.

வயிற்றுப் பசிக்காக நாட்டிலுள்ள பிரச்சினைகளை மறந்தால் வயிற்றுப் பசியும் ஆறப்போவதில்லை. நாடும் எமக்கு மிஞ்சப்போவதில்லை. நெருக்கடி நிலையென்று பொறுமையாக இருந்தால் எமது நாட்டின் விதியை யாராலும் மாற்றியமைக்க முடியாது.

பண்டாரநாயக்கவின் செயற்பாடுகளின் காரணமாகவே நாடு இந்த நிலைமை சந்தித்துள்ளதாகவும், ஆங்கில மொழியை தொடர்ந்து முன்னெடுத்திருந்தால் எமது நாடு சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றியிருக்குமென்றும் எதிர்த்தரப்பினரும் குறிப்பிடுகிறார்கள். ஆளுந்தரப்பினரும் குறிப்பிடுகிறார்கள். தாய்மொழியும் சுதந்திர கல்வியும் இருந்ததன் காரணத்தினாலேயே அடிமட்டத்திலுள்ள பெற்றோர் ஒவ்வொரு சந்ததியினையும், வாழ்க்கைச் சவாலையும் வெற்றிக்கொண்டார்கள். அதனூடாகவே, கலாசாரம் நிறைந்த சமூகத்தை உருவாக்க முடிந்தது. பணவீக்கத்தைப் பயன்படுத்தி தாய்மொழி மற்றும் சுதந்திரக் கல்வியிலும் கைவைக்க முயற்சிக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளுக்கான பதில் வன்முறைகளில் இல்லை. பிரச்சினைகளுக்கான பதிலை தம்மால் வழங்க முடியாவிட்டால் தீர்வைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய ஆட்சிமுறையை அமைப்பதற்காக அடுத்தவருடம் ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டும். பெரியபெரிய விடயங்களை தான் நினைத்தவாறு செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை கிடைக்கவில்லை. ரணில் தேர்தலினூடாக தெரிவான ஜனாதிபதி அல்ல. குறைந்தது மக்களின் விருப்புடன் கூட அவர் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை. அவர் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர். தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரே இறுதியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாகியுள்ளார்.

ஆகவே, ரணில் தெரிவுசெய்யப்பட்டதற்காக நோக்கங்களையே நிறைவேற்ற முடியுமே தவிர, அதற்கப்பால் பெரிய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது. சுபீட்சத்தின் நோக்கத்துக்கான வேலைத்திட்டத்துக்கே மக்கள் ஆணை கிடைத்தது. அந்த கொள்கைத்திட்டத்தில் மின்சார சபையை விற்கவேண்டும் என்று குறிப் பிடப்படவில்லை. ஒருபுறம் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை விற்க முயற்சிக்கிறார்கள். லக்ஷபானவையும் விற்க முயற்சிக்கிறார்கள். இந்த விடயங்களை செய்வதற்கு ரணிலுக்கு இடமில்லை. மக்கள் ஆணையில்லாத விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதிக்கு இல்லை. பொருளாதார மத்திய நிலையங்களில் கைவைக்க ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கக்கூடாது. மக்கள் பசியில் இருக்கிறார்கள் என்பதற்காக நாட்டில் இடம்பெறும் விடயங்களில் அவதானத்துடனேயே இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும்வரை இவற்றை செய்ய முடியாது - என்றார்.

போசாக்கின்மையால்...

தோட்டப் பாடசாலைகளிலுள்ள மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அட்டனில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

மாணவர்களுக்கிடையே நிலவும் போஷாக்கின்மை குறித்து அரசு கவனம் செலுத்தாதுள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள 43 இலட்சம் மாணவர்கள் இருக்கின்ற போதும் அதில் 11 இலட்சம் மாணவர்களுக்கு கல்வி அமைச்சு மூலம் உணவுத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அதுவும் தலா ஒரு மாணவருக்கு 100 ரூபா மாத்திரம். இது எவ்வாறு சாத்தியப்படும்?

29 இலட்சம் மாணவர்களுக்கு போசாக்கு அவசியம் என யுனிசெப் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையையும் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். போசாக்கின்மையால் மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தருவதும் குறிப்பாக, பெருந்தோட்டப் பகுதியில் குறைவடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

பெருந்தோட்டப்புற மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு பெரிதும் முகங்கொடுத்துள்ள நிலையில், பிள்ளைகளின் போசாக்கு நிலைமையை கவனிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

ஆகையால் பெருந்தோட்ட மாணவர்களிடையே அதிகளவு மந்த போசாக்கு நிலைமை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக அட்டன், நுவரெலியா கல்விவலயத்தை எடுத்தக்கொண்டால் இப்பகுதியில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பிலான எந்தவொரு புள்ளவிபரத்தையும் கூட எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இது எந்தவகையில் சாத்தியம்? போசாக்கு பிரச்சினை எதிர்கால மாணவர்களின் கல்வியை பெரிதும் பாதிக்கும். ஆகையால் அரசு இது குறித்து முறையான திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டியது அவசியம் - என்றார்.

வடக்கின்...

விமான சேவை நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளமை, வடமாகாண மக்களுக்கு மாத்திரமன்றி கிழக்கு மற்றும் அநுராதபுரம் பொலன்னறுவை போன்ற வடமத்திய மாகாண மக்களுக்கும் நன்மை பயக்கவுள்ளதாகவும் உள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், "அடிப்படையான வசதிகளுடன் மட்டுப்படுத்தப்பட்டளவு சேவைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டம் கட்டமாக விஸ்தரிப்பதற்கு தேவையான நகர்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

இதுதொடர்பாக, இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதுடன் அமைச்சரவையிலும் பிரஸ்தாபிக்கவுள்ளேன்.

இந்நிலையில், மக்கள் சரியான முறையில் இதனைப் பயன்படுத்துவார்களாயின், எதிர்காலத்தில் இந்தியாவிற்கான சேவைகள் விரிவுபடுத்தப்படும் என்பதுடன், ஏனைய நாடுகளிலிருந்தும் சேவையை முனனெடுப்பதற்கும் விமான நிறுவனங்கள் முன்வரும்.

இதன்மூலம், எமது பிரதேசத்தின் சுற்றாலாத்துறை வளர்ச்சியடைவதுடன், ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடுகளுக்கான நேரடி வாசலாகவும் பலாலி விமான நிலையம் செயற்படும். இது எமது மக்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தும்" என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காங்கேசன்துறைக்கும் பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் போன்றவற்றிற்கு இடையிலான சரக்கு படகு சேவையை ஆரம்பிக்கும் தன்னுடைய முயற்சிகளும் விரைவில் சாத்தியமாகும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சனத் நிஷாந்தவுக்கு...

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் இலங்கை நீதித்துறை அதிகாரிகள் சங்கம் மற்றும் இரண்டு சட்டத்தரணிகள் இணைந்து தாக்கல் செய்த வழக்கு தொடர்பில் இராஜாங்க அமைச்சர் நிஷாந்தவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

முன்னதாக, இலங்கை நீதித்துறை அதிகாரிகள் சங்கம் தாக்கல் செய்த வழக்கை கவனத்திற்கொண்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் இராஜாங்க அமைச்சர் நிஷாந்தவுக்கு நோட்டீஸ் அனுப்பியது.

அவருக்கு ஏன் தண்டனை வழங்கக்கூடாது என்பது குறித்து நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி விளக்கமளிக்க உத்தரவிட்டார்.

கடந்த ஓகஸ்ட் 23ஆம் திகதி பத்தரமுல்லையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, ஆர்ப்பாட்டக்காரர்களை கைதுசெய்து விடுவித்தமை தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டதுடன், அது நீதி நிர்வாகத்தில் நேரடியாக தலையிடுவதற்கு சமம் என மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

சனத் நிஷாந்த எதிர்கால நீதிமன்ற உத்தரவுகளில் செல்வாக்கு செலுத்த முயற்சித்ததாகவும் பொதுவாக நீதித்துறையை அச்சுறுத்த முயற்சித்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மனுக்களை பரிசீலித்த நீதிமன்றம், இராஜாங்க அமைச்சருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது. இதேவேளை,நேற்றைய விசாரணையின்போது, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை சமர்ப்பிக்குமாறு சட்ட மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ். - பலாலி...

என்ற விமான சேவை நிறுவனம் சென்னைக்கு பலாலியிலிருந்து விமான சேவையை ஆரம்பித்தது.

வாரமொன்றுக்கு இந்த விமான சேவை நிறுவனத்தினால் நான்கு சேவைகள் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பயணியொருவர் 20 கிலோ வரை பொருட்களை விமானத்தில் எடுத்துச்செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பலாலி விமான நிலையப் பணிகள் கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில், மீண்டும் விமான சேவை ஆரம்பமாகியது.

ஜனாதிபதி — தமிழ்...

ஜனாதிபதியுடனான சந்திப்புக்குப் பின்னர் சந்திப்பின் போக்கு தொடர்பாக மீண்டும் கூடி கலந்துரையாட முடிவெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் சிவகரனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் ஆரம்பித்த குறித்த கலந்துரையாடல் இரவு 10 மணிவரை நடைபெற்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் தமிழ்த் தரப்பிற்கும் இடையே பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ள நிலையில், தமிழர் தரப்பு எவ்விதமான நோக்கு நிலையில் அணுகுவது அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், கருத்தியலாளர்களுக்கும் இடையே இந்த கூட்டுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், பொ.ஐங்கரநேசன், பா.கஜதீபன், க.அருந்தவபாலன், கே.பி.தவராசா உள்ளிட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள், பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள், அரசியல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

போதை மாத்திரைகளுடன்...

அவர் இன்னும் இரண்டு வருடங்களில் ஓய்வுபெறவுள்ளார்.

குறித்த தாதியின் மகன் போதைப்பொருள் விற்பனை செய்வதுடன், போதைக்கு அடிமையானவர். போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் அவர் சிலகாலம் சிறைத்தண்டனை அனுபவித்தவர்.

கேகாலை பொது வைத்தியசாலையின் வார்ட் ஒன்றில் போதை மாத்திரை விற்பனை செய்யப்படுவதாக தமக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த தாதி கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னதாக கேகாலை தலைமையக பொலிஸ் இலஞ்ச குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், ஒற்றராக கேகாலை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கேகாலை வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த தாதியிடம் 2000 ரூபா கொடுத்து 3 வகையான 40 போதை மாத்திரைகளை பெற்றுக்கொண்டுள்ளார்.

இதன்போது வைத்தியசாலைக்கு விரைந்திருந்த பொலிஸ் குழுவொன்று தாதியை கைதுசெய்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட தாதி கேகாலை நீதவான் நீதிமன்றில் நேற்று (12) முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இறைச்சிக் கடைகளுக்கு...

இதற்கமைய கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களம் இறைச்சி விற்பனை நிலையங்கள் மற்றும் இறைச்சிக் கடைகள் தொடர்பில் அறிக்கை ஒன்றினை குறிப்பிட்டு மட்டக்களப்பு அக்கரைப்பற்று மற்றும் கல்முனை மாநகரசபை பகுதிகளிலுள்ள அனைத்து இறைச்சிக் கூடங்கள் மற்றும் இறைச்சிக் கடைகள் (கோழிக் கடைகள் தவிர) நேற்று முதல் ஒரு வார காலத்திற்கு மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. மேலும் அண்மையில் கிழக்கு மாகாணம் உள்ளிட்ட பல பகுதிகளில் ஏற்பட்ட கடும் குளிர் காலநிலை காரணமாக பல இடங்களில் பெரும் எண்ணிக்கையிலான கால்நடைகள் உயிரிழந்தமை தொடர்பில் பல செய்திகள் வெளியாகியிருந்தன. இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவிற்கமைய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஏலவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும் எண்ணிக்கையிலான கால்நடைகள் உயிரிழந்தமைக்கான காரணத்தைக் கண்டறிய இரசாயனப் பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் மாட்டிறைச்சி ஆட்டிறைச்சியைக் கொண்டுசெல்ல உடனடித் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொதுச் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி கொண்டு செல்வதை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது

டயனா கமகே...

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே வாதத்திற்கான திகதி தீர்மானிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்குமாறு செயற்பாட்டாளர் ஓஷல ஹேரத்தால் நவம்பர் 15ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் கமகே, குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர், பொது பாதுகாப்பு அமைச்சர், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற பொதுச் செயலாளர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பிரித்தானிய குடியுரிமை பெற்றுள்ளதாகவும், நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம், அத்தகைய நபர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதியற்றவர் எனவும் மனுதாரர் கோரியுள்ளார்.

எனவே, இராஜாங்க அமைச்சர் கமகே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என அறிவித்து, அதனை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்குமாறு ஓஷல ஹேரத் மேன்முறையீட்டு நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

சீரற்ற காலநிலை...

லேடி ரிச்வே குழந்தைகள் வைத்தியசாலையின் குழந்தைகள் நல வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இதுகுறித்து டொக்டர் தீபால் பெரேரா மேலும் தெரிவிக்கையில்,

கடும் குளிர் மற்றும் வளி மாசடைந்துள்ள இக்காலப்பகுதியில் 2 வயதுக்கும் குறைந்த குழந்தைகள், 65 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார், நீரிழிவு நோயாளர்கள், சுவாச நோயால் நீண்டகாலம் அவதிப்படுவோர் ஆகியோர் தமது உடல்நலம் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும்.

அத்தோடு சுவாச நோய்களுக்கான (ஆஸ்துமா) மருந்துகளை பெற்றுக்கொள்வோர் தொடர்ந்தும் அதற்கான மருந்துகளை உட்கொள்ள வேண்டும். 'இன்ஹேலர்' பாவிக்கும் நோயாளர்கள் இருப்பின் அவர்கள் வைத்திய ஆலோசனைக்கமைய முறையாக மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

கடும் குளிர் மற்றும் வளிமாசு அதிகரித்துள்ள பிரதேசங்களில் வசிப்போர் குழந்தைகளை வெளியில் அழைத்துச் செல்லும்போது உடலுக்கு உஷ்ணத்தை தக்கவைக்கும் ஆடைகளை அணிவித்து அழைத்துச் செல்லவேண்டும். அத்தோடு முதியோர் முகக்கவசம் கட்டாயம் அணியவேண்டும்.

இடைக்கிடை மழை பெய்துவருவதால் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளது. மூன்று நாட்களுக்கு காய்ச்சல் இருப்பின் கட்டாயம் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளவேண்டும்.

குழந்தைகளிடையே வைரஸ் நோய்கள் இலகுவாக பரவக்கூடியதால், இருமல், காய்ச்சல், தடிமன் உள்ளிட்ட அறிகுறிகள் காணப்படுமாயின் குழந்தைகளை பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் குழந்தைகள் காப்பகங்களுக்கு அனுப்பாது அவர்களை ஓய்வெடுக்க வைக்கவேண்டும். குளிர் நிலவும் காலப்பகுதியில் நோயாளர்களின் அறைக்கதவுகள், ஜன்னல்களை மூடிவைக்க வேண்டும். நுவரெலியா போன்ற பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள் குளிருக்கு பழக்கப் பட்டிருந்தாலும், குளிருக்கு பழக்கமில்லாத பகுதிகளில் வசிப்போர் விரைவில் நோய்வாய்ப்படக்கூடும் - என்றார் அவர்.

வாகன விபத்தில் உயிரிழந்த தொழிலாளி குடும்பத்துக்கு சலுகைகளுடன் 30 இலட்சம் இழப்பீட்டுக்கு இணக்கம்!

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவிப்பு

(ஆ.ரமேஸ்)

அக்கரப்பத்தனை டொரிங்டன் தோட்டத்தில் ட்ரெக்டர் வாகனம் விபத்தில் உயிரிழந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சங்குபிள்ளை கந்தையா (வயது 48) என்ற தொழிலாளி குடும்பத்துக்கு வீடு மற்றும் காணி சலுகைகளுடன் 30 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்க தோட்ட நிர்வாகம் (12) நேற்று இணக்கம் தெரிவித்துள்ளது.

இ.தொ.கா. பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் மற்றும் காங்கிரஸின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதுபாண்டி ராமேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் தோட்ட நிர்வாகத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கடந்த 05ஆம் திகதி டொரிங்டன் தோட்ட தொழிற்சாலையிலிருந்து கல்மதுறை தோட்டத்திற்கு உர மூடைகளை ஏற்றிச் சென்ற டெக்கர் வாகனம் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் உர மூடைக்குள் சிக்குண்டு விபத்துக்குள்ளான தொழிலாளர்களில் மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தனர். இந்நிலையில் விபத்தில் பாதிக்கப்பட்டு நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை பெற்றுவந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சங்குபிள்ளை கந்தையா (வயது 47) நேற்று முன்தினம் (11) காலை 6.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த தொழிலாளிக்கு சவப்பெட்டி மற்றும் மரணச்சடங்கு செலவு மாத்திரம் பொறுப்பேற்பதாக டொரிங்டன் தோட்ட நிர்வாகம் உயிரிழந்தவரின் குடும்பத்திடம் தெரிவித்துள்ளது.

ஆனால், தொழில் நிமிர்த்தம் விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த தொழிலாளி மற்றும் சிகிச்சை பெற்றுவரும் தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் எனவும் இதற்கான நீதி கிடைக்கும் வரை தாம் பணிக்கு திரும்பப் போவதில்லை எனவும் டொரிங்டன், ஸ்டார், எல்பெபத்த ஆகிய தோட்டங்களின் தொழிலாளர்கள் நேற்று (12) காலை தொடக்கம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு அக்கரப்பத்தனை பிரதைச சபை தவிசாளர் இராமன் கோபால் கொண்டுசென்றிருந்தார்.

இதையடுத்து நேற்று (12)) காலை அக்கரப்பத்தனை பிரதேசத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்டு ஜீவன் தொண்டமான் டொரிங்டன் தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடினார்.

இதன்போது உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு நஷ்டஈடாக 30 இலட்சம் பணமும், வீடு வசதியில்லாத நிலைமை சுட்டிக் காட்டப்பட்டதால் தற்காலிகமாக தோட்டத்தில் உத்தியோகத்தர் விடுதி ஒன்றை மீள் புனரமைத்து தரவும், வாழ்வாதாரத்தை முன்னெடுத்து செல்ல தோட்ட தேயிலை காணியில் ஒரு பகுதியை குத்தகை அடிப்படையில் தோட்ட நிர்வாகம் வழங்கவும் உறுதியளித்துள்ளது.

அத்துடன், உயிரிழந்த தொழிலாளிக்கான சவப்பெட்டி செலவு மற்றும் மரணச்சடங்கு செலவை தோட்ட நிர்வாகம் பொறுப்பேற்பதாக இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் தொழில்வாய்ப்புச் சந்தை

20 தொழில் வழங்குநர்களிடம் 500 மாணவர்கள் தொழில் பெறும் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற் சந்தை நிகழ்வு நாளை (14ஆம் திகதி) புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துத் துறையின் 'AHEAD' செயற்றிட்டத்தின் கீழ், தொழிற்றுறைத் தொடர்பு நிலையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடத்தும் இந்தத் தொழில் வாய்ப்புச் சந்தை – 2022இற்கான சகல போதுமானதும், பொருத்தமானதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், இத்தொழில்வாய்ப்புச் சந்தையின் பிரதான நோக்கமாக அமைவது நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்பைப் (Internship Opportunities) பெற்றுக் கொடுப்பதாகும். இந்தத் தொழில் வாய்ப்புச் சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழில்நுட்பம், தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 20 தொழில் வழங்கும் நிறுவனங்கள் கலந்துகொள்ள வுள்ளதுடன், சுமார் 500இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வின் ஓர் அங்கமாக மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சை மற்றும் சுயவிபரக்கோவை என்பவற்றை எவ்வாறு சிறந்தமுறையில் ஒழுங்கமைத்து வெற்றியடைவது தொடர்பான செயலமர்வு ஒன்று இலங்கை ஆளணி பட்டய நிறுவனம் (CIPM) ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், சமீபத்தில் தமது பீடத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தொழிற்றுறை நிறுவனங்களுடன் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் தொடர்புகளை விருத்திசெய்தல் என்பன இத்தொழில் வாய்ப்புச் சந்தையின் துணை நோக்கங்களாகக் காணப்படுகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்

விபத்து நடந்த சில மணித்தியாலங்களில் டுபாய் நோக்கித் தப்பியோடிய சாரதி



கொள்ளுப்பிட்டி விபத்து விசாரணையில் புதிய திருப்பம்

கடந்த சனிக்கிழமை காலை கொள்ளுப்பிட்டியில் இரவு விடுதியிலிருந்து திரும்பும்போது விபத்தில் சிக்கிய 24 வயதுடைய வர்த்தகரான மொஹமட் ரைசுல் ரிசாக் என்ற சாரதி விபத்து இடம்பெற்று மணித்தியாலங்களின் பின்னர் டுபாய் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்று சில மணித்தியாலங்களின் பின்னர் சந்தேக நபர் சனிக்கிழமை காலை 9.55 மணியளவில் டுபாய்க்கு சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சந்தேகநபர் இலங்கை யில் தனது பெயரில் மூன்று கார்களை வைத்திருப்பதாகவும், அந்த வாகனங் களுக்கான பணம் டுபாயிலிருந்து பெறப்பட்ட தாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சந்தேக நபரின் தாயாரிடமும் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

கஹதுடுவ பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதியான 58 வயதுடைய நபரொருவர் கொள்ளுப்பிட்டியில் இரவு விடுதியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த சொகுசு கார் முச்சக்கர வண்டியின் மீது மோதியதில் உயிரிழந்துள்ளார்.

விபத்து நடந்ததையடுத்து கார்ச் சாரதி அங்கிருந்து தப்பியோடினார்.

விபத்தின்போது காரில் மூன்று பெண்களும் மற்றுமொரு ஆணும் இருந்ததாகவும், 29 மற்றும் 31 வயதுடைய இரு பெண்களும் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் பயணித்த ஏனைய இருவரிடமும் கொள்ளுப்பிட்டி பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். சந்தேகநபர் சாரதிக்கு தெஹிவளை மற்றும் வெல்லம்பிட்டிய ஆகிய இரண்டு முகவரிகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அவர் கொழும்பு முன்னணி ஹோட்டல் ஒன்றில் சொகுசு அறையில் தங்கியிருந்தார்.

சந்தேக நபர் வெள்ளிக்கிழமை மாலைமுதல் சனிக்கிழமை அதிகாலை 5 மணிவரை கிளப்பில் பார்ட்டியில் ஈடுபட்டதாகவும், விபத்து நடந்தபோது காருக்குள் இருந்த மூன்று பெண்கள் அவரை இரவு விடுதியில் சந்தித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை அழைத்து வருவதற்கு இன்டர்போல் உதவியை பொலிஸார் நாடியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலை துறைமுகத்திலிருந்து மாயமான மீனவர்கள் 16 நாட்களின் பின் மீட்பு

(பாறுக் ஷிஹான்)

திருகோணமலை கடற்றொழில் துறைமுகத்திலிருந்து கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான நிலையில், அதில் பயணித்த மீனவரொருவரை 16 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் (11) இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

5 மீனவர்களுடன் பயணித்த ஹிம்சரா பல நாள் மீன்பிடி இழுவைப் படகு பாதகமான காலநிலையை தொடர்ந்து சங்கமன்கந்த முனையிலிருந்து 46 கடல் மைல் தொலைவில் படகு கவிழ்ந்தது.

மேற்படி விடயத்தை மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் ஊடாக தகவலை உறுதிப்படுத்திய பின்னர் மீனவர்களை மீட்பதற்காக தென்கிழக்கு கடற்பரப்பில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த எஸ்.எல்.என்.எஸ்.ரணரிசியை கடற்படையினர் அனுப்பியுள்ளனர்.அனர்த்தம் பற்றிய தகவல் கிடைத்ததும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவின் பணிப்புரையின்பேரில் கடற்படையினர் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன்படி, கடற்படையினர் உள்ளூர் மீன்பிடி படகின் உதவியுடன் கவிழ்ந்த விசைப்படகில் இருந்து மூன்று மீனவர்களை மீட்டதுடன், அவர்கள் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். காணாமல்போன இரண்டு மீனவர்களைக் கண்டறியும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் இயந்திர அறையில் சிக்கியிருந்த நிலையில், பின்னர் மீட்கப்பட்டுள்ளார். மற்றைய மீனவரைத் தேடும் பணியை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

போராளிகள் நலன்புரிச் சங்கம் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. "இனத்துக்காக உழைத்தவர்களை இன்னலின்றி வாழ வைப்போம்" எனும் தொனிப்பொருளில் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. சர்வமதத் தலைவர்களின் ஆசியுரையோடு இடம்பெற்ற குறித்த நிகழ்வில் போராளிகள், சட்டத்தரணி தவராசா மற்றும் சர்வமதத் தலைவர்கள், வர்த்தகப் பிரதிநிதிகள், முன்னாள் போராளிகள் என பலரும் கலந்துகொண்டிந்தனர்.

எல்.பி.எல் 2022: முதல் தோல்வியை சந்தித்த கண்டி பல்கொன்ஸ்

நடப்பு எல்.பி.எல் தொடரில் குசல் மெண்டிஸ் தலைமையிலான கோல் க்ளாடியேட்டர்ஸ் அணி 12 ஓட்டங்களினால் கண்டி பல்கன்ஸ் அணியை வீழ்த்தி தொடரில் இரண்டாவது வெற்றியை பதிவு செய்ததுடன், கண்டி பல்கன்ஸ் அணியின் ஹெட்ரிக் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற தொடரின் 9வது ஆட்டத்தில் கோல் க்ளாடியேட்டர்ஸ் - கண்டி பல்கன்ஸ் அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கோல் க்ளாடியேட்டர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 153 ஓட்டங்களை குவித்தது.

154 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கண்டி பல்கன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 141 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 12 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது. வரிசையாக முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்ற கண்டி பல்கன்ஸ் அணி தொடரில் முதல் தோல்வியை சந்தித்தது. போட்டியின் ஆட்டநாயகனாக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தானுக தாபரே தெரிவானார்.

BOC ரண் கெகுளு SMART
ஐந்தாம் ஆண்டுச் செல்வங்களே உலகை வெல்லும் தங்கங்களே

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோருக்கு இவ்வருடமும்

ரூ.30 மில்லியன் பெறுமதியான

2,000 புலமைப் பரிசில்களோடு பல பரிசில்களை

வழங்க நாம் தயாராக உள்ளோம்.

இன்றே உங்கள் பிள்ளைக்கு BOC ரண் கெகுளு SMART கணக்கொன்றை ஆரம்பித்து குறைந்தபட்சம் 5,000/- ரூபாய் நிலுவையை பேணுங்கள். அல்லது தற்போதைய கணக்கின் மீதியை குறைந்தபட்சம் 5,000/- ரூபாய் வரை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது 1975 க்கு அழைத்து பெற்றுக் கொள்ளுங்கள்.

1975 BOC www.boc.lk

AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

*நிபந்தனைகள் உண்டு

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, டிசம்பர் 13ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

கானல் நீராகும் மக்களின் எதிர்பார்ப்பு!

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய நாடாளுமன்ற விவகார ஆலோசகருமான பேராசிரியர் ஆஷு மாரசிங்க அண்மையில் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் 'துலாவ' விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசும்போது மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கத் தயாராகிறார் என்றும் பிரசார நடவடிக்கைகளை ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டார் என்றும் கூறியிருந்தார் அல்லவா?

இலங்கையின் கடன் நிலைவரம் குறித்து ஆளுநர் தவறான தகவல்களை வெளியிட்டுவருவதாகவும் மாரசிங்க குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால், ஆளுநரிடமிருந்து ஆட்சேபம் வந்ததையடுத்து 'துலாவ' நிகழ்ச்சியில் தான் கூறியவை தவறானவை என்று கூறி மாரசிங்க நிபந்தனையற்ற மன்னிப்பையும் கோரினார்.

ஆனால், ஆளுநர் வீரசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரோ, இல்லையோ அது வேறு விடயம். இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு பெரும்பாலான இலங்கையர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடவும் ஆளுநர் மீது கூடுதல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று ஆய்வொன்றின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

மாற்றுக்கொள்கைகள் நிலையத்தின் ஆய்வுப்பிரிவான சமூக குறிகாட்டி (Social Indicator) மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்த சுட்டெண் (Economic Reforms Index) ஆய்வில் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்த்துவைப்பதற்கு சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் மிகவும் நம்பிக்கை வைக்கக் கூடியவராகவும் பெரும்பான்மையான இலங்கையர்களின் நம்பிக்கையை பெற்றவராகவும் மத்திய வங்கி ஆளுநர் விளங்குவதாக கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியை தீர்த்துவைப்பதற்கு சரியான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியவர் என்று ஆளுநர் மீது 57 சதவீதமான இலங்கையர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் 31.4 சதவீதமானவர்கள் மாத்திரமே அவர் மீது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.

சீர்திருத்தங்களை முன்னெடுத்து பொருளாதார நிலைவரத்தை மாற்றியமைக்கும் பணிகளைப் பொறுத்தவரை இரண்டாவதாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது இலங்கையர்கள் (45 சதவீதமானோர்) நம்பிக்கை வைத்திருப்பதாகவும் தெரியவந்திருக்கிறது.

அதேவேளை, பொது நிதிக்குழுவின் (Public Finance Committee) தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா மூன்றாவது இடத்திலும் (43 சதவீதம்) அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான குழுவின் (Committee on Public Enterprises) தலைவர் பேராசிரியர் ரஞசித் பண்டார நான்காவது இடத்திலும் (25 சதவீதம்) இருக்கிறார்கள்.

பொருளாதார நிலையுறுதிப்படுத்தலுடன் தொடர்புடைய குறுகியகால மற்றும் நடுத்தரகால செயற்றிட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய கவுன்சில் உப குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஐந்தாவதாக (23 சதவீதம்) இலங்கையர்களினால் நம்பிக்கை வைக்கக்கூடியவராக விளங்குகிறார்.

அதேவேளை, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான அரசாங்கத்தின் அணுகுமுறையை பெரும்பான்மையான (61 சதவீதம்) இலங்கையர்கள் அங்கீகரிக்கிறார்கள். நெருக்கடியை வெற்றிகொள்ள நாணய நிதியத்தின் உதவியினால் இயலும் என்று நாட்டு மக்களில் 75 சதவீதமானவர்கள் நம்புகிறார்கள். அரசாங்கத்தின் அணுகுமுறையில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாக 20 சதவீதமானவர்களே இருக்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள சீனா உதவும் என்று 37 சதவீதமான இலங்கையர்கள் நம்புகிறார்கள். இந்தியா உதவும் என்ற கருத்தைக் கொண்டவர்களாக சுமார் நான்கில் ஒரு பங்கு (24 சதவீதம்) மக்களும் ஜப்பான் உதவும் என்று நம்புபவர்களாக 14 சதவீதமான மக்களும் இருக்கிறார்கள். ஆனால், அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நாடுகள் உதவும் என்று 10 சதவீதத்துக்கும் குறைவான இலங்கையர்களே நம்புகிறார்கள்.

பொருளாதாரக் கொள்கைகளைப் பொறுத்தவரை, நாட்டில் வெளிநாட்டுக் கம்பனிகள் முதலீடுசெய்ய அரசாங்கம் அனுமதிக்கவேண்டும் என்று இலங்கையர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் (56 சதவீதம்) நம்புகிறார்கள் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஆதரவாக சனத்தொகையில் பெரும்பான்மையானவர்கள் (50.1 சதவீதம்) இருக்கின்ற போதிலும் அரசாங்க கூட்டுத்தாபனங்களை தனியார்மயமாக்குவதை அவர்கள் (52.1சதவீதம்) எதிர்க்கிறார்கள். அதேவேளை உள்நாட்டு இறைவரி திருத்தச்சட்டத்தின் மூலமாக வரிகள் உயர்த்தப்படுவதை சுமார் 64 சதவீதமான இலங்கையர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், 35 சதவீதமானோர் அந்த சட்டத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை.

இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலம் குறித்து 41 சதவீதமான இலங்கையர்கள் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்துவதாகவும் 30 வயதில் உள்ளவர்களும் அவர்களை விட கூடுதல் வயதில் உள்ளவர்களும் பொருளாதார எதிர்காலம் குறித்து கடுமையான அவநம்பிக்கை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். சுயதொழில் செய்பவர்களும் தனியார்துறையில் வேலை செய்பவர்களும் இதே மனோநிலையையே கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் ஒரு வருட காலத்தில் நாட்டின் பொருளாதார நிலைவரம் மேம்படும் என்று 18 சதவீதமானவர்கள் மாத்திரமே நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதேவேளை, சந்தர்ப்பம் கிடைக்குமானால் இன்னொரு நாட்டுக்கு சென்றுவிடுவதற்கு சுமார் 60 சதவீதமான இலங்கையர்கள் விரும்புகிறார்கள்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்ததையும் விட தங்களது பொருளாதார நிலைவரம் இப்போது படுமோசமாகிவிட்டதாக அதிகப் பெரும்பான்மையான இலங்கையர்கள் (79 சதவீதம்) கூறுகிறார்கள். பொருளாதார நெருக்கடியின் விளைவாக தங்களது உணவுப்பொருட்களின் நுகர்வு அல்லது கொள்வனவின் தரம் மாற்றமடைந்துவிட்டது என்று 82 சதவீதமான இலங்கையர்கள் கூறுகிறார்கள்.

தற்போதைய பொருளாதார நிலைவரம் மற்றும் கடந்த சில மாதங்களாக ஆராயப்படுகின்ற பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பிலேயே நாடளாவிய ரீதியிலான இந்த ஆய்வின்போது மக்களிடம் அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டன. ஆய்வுக்கான களப்பணி 2022 ஒக்டோபர் 21 தொடக்கம் 31 வரை மேற்கொள்ளப்பட்டது.

இதுவரைகாலம் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்த நாட்டு மக்கள் இப்போது நிர்வாக ரீதியான மாற்றத்தை விரும்புவது தெரிகிறது. அரசியல்வாதிகளை விட பொருளாதார, நிர்வாக அறிவுகொண்ட ஒருவரால் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியுமென்ற மக்களின் எதிர்பார்ப்பு நியாயமானதே. ஆனால், அந்த மாற்றத்திற்கு, இப்போதுள்ள அரசியல் சிஸ்டம் வழிவிடுமா என்பதுதான் பெரும் கேள்வி.

நாட்டின் தற்போதைய நிலைமையை நோக்குவோமானால், அரங்கேறிவரும் அரசியல் நிகழ்வுகளை அவதானிப்போமானால், சீரழிந்த அரசியல் கலாசாரம் மேலும் தொடரப்போவது தெரிகிறது. அடுத்த ஆட்சியையும் தாங்களே கைப்பற்றப்போவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் பகிரங்கமாக தெரிவிக்கிறார் என்றால் மக்கள் ஆணையை எப்படியும் பெற்றுவிடலாம் என்ற அவர்களின் உள்நோக்கு புலப்படும் அதேசமயம் ஜனநாயகத்தின் இருப்பும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. மக்களின் நம்பிக்கை, அவர்களின் எதிர்பார்ப்பு கானல் நீர் ஆகுமென்பதையே களநிலைவரம் சொல்கிறது.

பொருளாதார மேன்மை தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்சங்க சம்மேளனங்களின் கருத்துகள்

பொருளாதார ஸ்திரத்தன்மை குறித்த உபகுழுவில் முன்வைப்பு

- 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் 50% மந்தபோசாக்குடையவர்கள்
- அரச வங்கி முறையினால் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடனை வசூலிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை



இந்நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்சங்க சம்மேளனங்களின் கருத்துகள், முன்மொழிவுகளை பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழு அண்மையில் பெற்றுக் கொண்டது. இந்தக் குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் அண்மையில் (03) கூடியபோதே இவ்வாறு கருத்துகள் பெறப்பட்டன.

மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இங்கு கருத்து தெரிவித்த அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத்தியகலாநிதி ஹரித அளுத்கே குறிப்பிடுகையில், மருந்துகள், உணவு மற்றும் போஷாக்குத் தொடர்பில் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குழுவின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள பெருமளவான பரிந்துரைகளுக்கு ஒத்ததாகவே தமது நிலைப்பாடு இருப்பதாகக் கூறினார்.

அண்மையில் வெளியிடப்பட்ட குடும்ப நலப் பணியகத்தின் தகவல்களுக்கு அமைய இதுவரை போசாக்கு குறித்த பிரச்சினைகள் மிகவும் குறைவாகக் காணப்பட்ட பொலன்னறுவை, மாத்தறை, காலி போன்ற பிரதேசங்களில் இந்தப் பிரச்சினை உயர்வடைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், உரிய ஒழுங்குமுறைப்படுத்தலின் கீழ் மருந்து கொள்வனவுக்குத் தேவையான 160 பில்லியன் ரூபா பெறுமதியை 20 பில்லியன் ரூபாவினால் குறைக்க முடியும் என்றார்.

சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள் கோரும் ஊழலைக் கட்டுப்படுத்துவது குறித்த முன்மொழிவுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருப்பதாக ஆய்வக சுகாதார நிபுணர்களின் தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ரவி குமுதேஷ் தெரிவித்தார். மருந்துகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதில் தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரம், அரசியல் தலையீட்டை முறியடிக்கப் போதுமானதாக இல்லையெனவும் குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 63 ஆகக் கொண்டு வருவதால், வேலை செய்யத் தயாராக உள்ள மற்றும் வேலை செய்யக்கூடியவர்கள் விருப்பமின்றி அரசுப் பணியிலிருந்து முன்கூட்டியே ஓய்வு பெறுவதற்கு அனுப்பப்படுகிறார்கள் என்றும், வெளியேறியவர்களுக்கு தனியார் அல்லது வெளிநாட்டு சேவையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஆசிரியர் வைத்தியகலாநிதி சந்தன தர்மரத்ன தெரிவித்தார். வைத்திய தொழில்துறையினரின் விசேடமாக விசேட வைத்திய நிபுணர்களின் ஓய்வுபெறும் வயது தொடர்பான சிக்கல்களுக்கு விரைவில் தீர்வுகாணப்பட வேண்டும் என உப குழுவின் தலைவர் தெரிவித்தார்.

ஊட்டச்சத்து தொடர்பாக குடும்ப நலப் பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் தகவல்களுக்கு அமைய, 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 50% ஊட்டச்சத்து குறைபாடு உள்ளதாகவும், கர்ப்பிணித் தாய்மாரின் உடல் நிறை குறியீட்டெண் வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்ப சுகாதாரப் பணியாளர்கள் மட்டத்தில் முன்னுரிமைகள் இனங்காணப்பட்டு இது தொடர்பான தீர்வுகள் காணப்பட வேண்டும் என இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், உபகுழுவின் முதலாவது அறிக்கையில் மின்சாரப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரிப்பது தொடர்பான முன்மொழிவொன்றை முன்வைத்திருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களைக் குறைத்து மதிப்பிடும் வகையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் முடிவுகள் காரணமாக மோசமான பொருளாதாரப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அரசாங்க வங்கிக் கட்டமைப்பின் ஊடாக அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீள வசூலிப்பதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லையென நிதித்துறையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

சுமார் 80% பெண்கள் ஆடைத்தொழில் துறையில் வேலை செய்கிறார்கள் என்றும் இந்தத் தொழில்துறையில் பலர் வறுமையான சூழலுக்கு முகங்கொடுப்பதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இலங்கையுடன் வர்த்தகம் செய்வது ஆபத்தானதென வெளிநாட்டு வங்கிகள் கூட தீர்மானித்துள்ளதாக பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான உபகுழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார்.

எனவே, சம்பந்தப்பட்ட பெரிய நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களை வெளிநாடுகளுக்கு மாற்ற முடிவு செய்தாலும், தங்கள் செலவைக் குறைப்பதில் கவனம் செலுத்தும் அந்நிறுவனங்கள் வறுமையில் வாடும் தமது தொழிலாளர்களை உடன் அழைத்துச் செல்லாது, வெளிநாட்டுப் பணியாளர்களை சேவையில் அமர்த்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இக்கூட்டத்தில் அமைச்சர் நசீர் அஹமட் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலிறுதியில் சாதிப்பார்களா 'அட்லஸ் சிங்கங்கள்'?

(மோகன ரூபன்)

பாடசாலை நாட்களில் அட்லஸ் என்ற உலகப்பட புத்தகம் நம்மிடம் இருந்திருக்கும். அட்லஸ் என்ற மலை, ஆபிரிக்கக் கண்டத்தின் வடமேற்கே உள்ள மொராக்கோ நாட்டில் இருக்கிறது. அதனால், மொரோக்கோ நாட்டு உதைபந்து வீரர்களுக்கு 'அட்லஸ் சிங்கங்கள்' என்பது இன்னொரு பெயர்.

உலகப்புகழ் பெற்ற பிரேசில் நாட்டின் உதைபந்து வீரர் பீலே. அவர் ஒருமுறை ''நான் உதைபந்தாட்டத்தின் மன்னன் என்றால் லார்பி பென்பாரெக் உதைபந்தாட்டத்தின் கடவுள்'' என்று சொன்னார்.

அட! யார் இந்த லார்பி பென்பாரெக் என்று கேட்கத் தோன்றுகிறதா? 'உதைபந்தாட்டத்தின் கடவுள்' என பீலேயால் பாராட்டப்பட்ட லார்பி பென்பாரெக் மொரோக்கோ நாட்டைச் சேர்ந்தவர். கசப்லங்கா நகரத்தில் பிறந்தவர். இப்படியும் ஒரு உதைபந்து வீரர் இருக்க முடியுமா என அந்தக்காலத்து ரசிகர்களை மூக்கின் மேல் விரல் வைக்கச் செய்தவர் இந்த லார்பி பென்பாரெக்.

சிறுவயதில் பெற்றோரை இழந்து விட்டவர் பென்பாரெக். அவருக்கு உதைபந்தாட்டம் கவலைகளை மறக்க வைக்கும் ஒரு புகலிடமாக மாறியது. ஆபிரிக்காவின் முதல் உதைபந்து நட்சத்திரமாக உருவெடுத்த பென்பாரெக் பிரான்ஸ் நாட்டுக்கு இடம்பெயர்ந்தார். பிரான்ஸ் நாட்டின் மர்செயில்ஸ் அணிக்காகவும் பிரான்ஸ் அணிக்காகவும் அவர் ஆடியிருக்கிறார். ப்ளக் பெர்ல் (கறுப்பு முத்து) என்பது அவரது செல்லப்பெயர். 'கடவுளின் கால்' என்பது லார்பி பென்பாரெக்கின் மற்றொரு செல்லப்பெயர்.

ஸ்பெயின் நாட்டின் அத்லெடிகோ மட்ரிட் அணி அந்தக்காலத்திலேயே 80 இலட்சம் பிராங்க் (பிரெஞ்சு நாணயம்) கொடுத்து அவரை வாங்கியிருக்கிறது. பென்பாரெக்கின் அபார ஆட்டத்தால், அத்லெடிகோ மட்ரிட் அணி 1950 மற்றும் 1951ஆம் ஆண்டுகளில் இரு முறை கிண்ணத்தை வென்றிருக்கிறது. 1956ஆம் ஆண்டு மொராக்கோ நாடு விடுதலையடைந்த பிறகு, அந்நாட்டு உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளராகவும் லார்பி பென்பாரெக் இருந்திருக்கிறார்.

தற்போது கட்டாரில் நடந்து வரும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில், வரலாற்றில் முதன்முறையாக மொரோக்கோஅணி காலிறுதிக்குள் நுழைந்திருக்கிறது. அதிலும், தகுதிச்சுற்றுப் போட்டி ஒன்றில், உலகின் தலைசிறந்த இரண்டாவது அணியாகக் கருதப்பட்ட பெல்ஜியத்தை 2-0 என மொரோக்கோ வீழ்த்தியமை சிறப்பு. ஆக, உதைபந்தாட்டக் கடவுள் லார்பி பென்பாரெக் காலத்து வேகமும் விறுவிறுப்பும் மொரோக்கோ வீரர்களுக்கு மீண்டும் வந்து விட்டதைப் போலிருக்கிறது.

தற்போதைய மொரோக்கோ அணியின் தலைசிறந்த வீரர்களில் ஒருவர் அஷ்ரப் அக்கிமி. இவர் ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மட்ரிட்டில் மொரோக்கோ நாட்டுப் பெற்றோருக்குப் பிறந்தவர். அக்கிமியின் அம்மா துப்புரவுத் தொழிலாளி. அப்பா நடைபாதை வணிகர்.

அக்கிமிக்கு தலைமுதல் கால்வரை உதைபந்து ஆர்வம். அக்கிமி தனது தாய் நாட்டு அணிக்காக ஆட முயற்சித்தபோது ஸ்பெயின் நாடு அனுமதி மறுத்துவிட்டது. இருந்தும் எதிர்ப்பை மீறி மொரோக்கோ அணியில் இணைந்துகொண்டார் அக்கிமி.

காலிறுதிக்கு முந்தையச் சுற்றில், ஸ்பெயின் அணியை மொரோக்கோ எதிர்கொண்டு பெனால்டி சூட்அவுட்டில் 3-0 என வீழ்த்தியது. இதில் வெற்றி கோலை அடித்தவர் அக்கிமி. தான் பிறந்து வளர்ந்த ஸ்பெயின் நாட்டின் அணியைத் தோற்கடித்து மொரோக்கோ அணியை அஷ்ரப் அக்கிமி காலிறுதிக்கு அழைத்துச் சென்றது ஒருவகையான காவிய நீதி.

மொரோக்கோவை பிறப்பிடமாக கொண்ட மிகச்சிறந்த உதைபந்து வீரர்களில் பலர் மொரோக்கோ அணிக்காக ஆடியதில்லை. எடுத்துக்காட்டு மருவன் பெலய்னி. இவர் கடந்த உலகக்கிண்ணப் போட்டியில் பெல்ஜியம் அணிக்காக ஆடியவர். இருந்தும் கூட, மொரோக்கோ அணி மீண்டும் நிமிர்ந்துள்ளது. லார்பி பென்பாரெக் காலத்து பொற்காலம் மீண்டும் பூத்திருப்பதைப் போலத் தோன்றுகிறது. மொரோக்கோ அணி பிரான்ஸுடன் மோதவுள்ளமை பெரும் எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை வரை காத்திருந்து பார்ப்போமே..!

இன்றைய நாளில்...

- 577 – சேர் பிரான்சிஸ் டிரேக் இங்கிலாந்தின் பிளைமவுத்தில் இருந்து தனது உலகத்தைச் சுற்றிவரும் பயணத்தை ஆரம்பித்தார்.
- 1642 – டச்சு நாடுகாண் பயணி ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தை அடைந்தார். இவரே நியூசிலாந்தை அடைந்த முதலாவது ஐரோப்பியர் ஆவார்.
- 1758 – வில்லியம் கோமகன் என்ற ஆங்கிலேயக் கப்பல் வடக்கு அட்லாண்டிக் கடலில் மூழ்கியதில் 360 பேர் உயிரிழந்தனர்.
- 1888 – யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சூறாவளியில் பலத்த சேதம் ஏற்பட்டது.
- 1972 – அப்பல்லோ-17இல் விண்வெளி வீரர்கள் யூஜீன் செர்னன், அரிசன் சிமித் ஆகியோர் சந்திரனில் இறங்கினர். சந்திரனில் இறங்கிய கடைசி மனிதர்கள் இவர்களே.
- 1982 – தென்மேற்கு யேமனை 6.0 அளவு நிலநடுக்கம் தாக்கியதில் 2,800 பேர் உயிரிழந்தனர். 1,500 பேர் காயமடைந்தனர்.
- 1996 – ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக கோஃபி அன்னான் தெரிவுசெய்யப்பட்டார்.
- 2003 – ஈராக் போர்: முன்னாள் ஈராக் அரசுத் தலைவர் சதாம் உசேன் அவரது சொந்த ஊரான திக்ரித்துக்கு அருகே அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.
- 2004 – முன்னாள் சிலி சர்வாதிகாரி அகஸ்தோ பினோசெ வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
- 2006 – ஊனமுற்றோர் உரிமைகள் சாசனம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நக்கல் நமசிவாயம்

சிறந்த ஆளுங்கட்சி ஒண்டு தேவையென சொல்லுற சஜித், முதலில நல்லதொரு எதிர்க்கட்சிய உருவாக்க வேணும் பாருங்கோ..! இருக்கிறத விட்டுட்டு பறக்கிறதுக்கு ஆசைப்படலாமோ..?

தீர்வு தொடர்பாக தமிழ்க் கட்சிகள் மூடிய அறைக்குள் கூட்டம் நடத்தாது பொதுவெளியில் நடத்தவேண்டும்!

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேசிய அமைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் வலியுறுத்து

(கனகராசா சரவணன்)

தமிழ் மக்கள் தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள தமிழ்க் கட்சிகள் மூடிய அறைக்குள் கூட்டம் நடத்தாது பொதுவெளியில் வடக்கு-கிழக்கிலுள்ள புத்திஜீவிகள், உரிமை போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஒன்றிணைத்து கலந்துரையாடி தீர்மானம் எடுக்கவேண்டுமென தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேசிய அமைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (11) மாலை இடம்பெற்ற விசேட ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தமிழ் மக்களுக்கான தீர்வுகளை வழங்க வடகிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார். இந்த அழைப்பு என்பதை வடகிழக்கு தமிழர்களை மட்டுமல்ல, உலகவாழ் தமிழர்களையும் சர்வதேச சமூகத்தையும் மீண்டும் ஏமாற்றும் செயலாகவே பார்க்கின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த நல்லாட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பாக ஆர்வம் காட்டவில்லை. ஆனால், இன்று ஒரு இக்கட்டான சூழ்நிலையில் ஜனாதிபதி ஆசனத்தை தக்கவைப்பதற்காகவும் சர்வதேச நாடுகளில் இருந்து இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காகவும் தனது கட்சியை நிலைநிறுத்தவும் பல அரசியல் தேவைக்காக இப்படியான நாடகத்தை அவர் அரங்கேற்றி வருகின்றார். இது அவருக்கு புதிய விடயமல்ல, விடுதலைப்புலிகள் இருந்த காலப்பகுதியில் கூட பல பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தார். அதன் விளைவு என்ன நடந்தது என எல்லோருக்கும் தெரியும். ஆகவே, இது தமிழர் தரப்பிற்கு புதிய விடயமல்ல. எனவே, இந்த அழைப்பிற்கு எவ்வாறு பதிலளிக்க போகின்றோம் என்பதை தமிழ்க் கட்சிகள் தீவிரமாக சிந்திக்க வேண்டும்.

முதலில் தமிழ்த் தேசியக் கட்சி தலைவர்கள் வடகிழக்கைச் சேர்ந்த தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உரிமைக்காக போராடியவர்கள் புலம்பெயர் பிரதிநிதிகள் அனைவரையும் ஒன்றாகத்திரட்டி கலந்துரையாடலை நடத்தி பேச்சுவார்த்தை தொடர்பான அழைப்புக்கு என்ன பதில் சொல்லவேண்டும், என்ன அடிப்படையில் இந்த பேச்சுவார்த்தை அமைய வேண்டும் என தெளிவாக முடிவெடுத்து அதனை அரசுக்கு சொல்லியிருக்கவேண்டும்.

இதை விடுத்து தனித்தனியாக ஜனாதிபதியை சந்திப்பதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று தனிதனியாக ஜனாதிபதியை சந்திப்பதால் தமிழ் மக்களுக்காக தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தையை குழப்பும் செயலாகும்.

ஜனாதிபதி ஒற்றையாட்சியை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்பது தெட்டத்தெளிவான உண்மை. அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மற்றும் ஜே.வி.பி. கட்சிகள் தற்போது 13ஐ தூக்கிப் பிடிக்கின்றனர். எனவே, 13 என்பது எங்களுக்கு இடைக்கால தீர்வு. ஆகவே, தமிழ்க்கட்சிகள் தமிழ் தேசியம் சார்ந்த அனைத்து கட்சிகளையும் சார்ந்தவர்களை ஒன்றாக கூட்டி பேச்சுவார்த்தையில் எதனை வலியுறுத்த வேண்டும் என்பதை பொதுவெளியில் பகிரங்கப்படுத்தவேண்டும்

அதை விடுத்து பிரதேசவாதம், மதவாதம் பேசி வடக்கில் இருந்து கிழக்கு பிரிபடுவோமாக இருந்தல் கிழக்கு இதே மட்டத்தில்தான் இருக்கும். இதனை மக்கள் உணர்ந்து தமிழ்த்தேசியம் சார்ந்து செயற்படவேண்டும். அதேவேளை வடகிழக்கில் சீனாவின் ஆதிக்கம் என்பது மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தென்னிலங்கையில் வியாபாரம் மற்றும் கடன் வழங்குநர்களாக வந்ததால் நிகழ்ந்தது. நல்லாட்சிக் காலத்தில் தமது இருப்பை பலப்படுத்திய சீனா இன்று ரணில் ஆட்சியில் வடகிழக்கில் அதிகமாக கால்வைக்க முனைகின்றது. வடக்கில் கடலட்டைகள் என்ற போர்வையில் கடற்றொழில் அமைச்சு மற்றும் பல்கலைக்கழகங்கள் ஊடாக வடக்கில் கால்பதித்துள்ளனர். அவ்வாறே கிழக்கில் திருகோணமலையிலும் இவர்களின் பிரசன்னம் அதிகமாக இருக்கின்றது. எனவே, சீன - இந்திய ஆதிக்கம் தொடர்பாக தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றாக கூடி தெளிவான முடிவெடுக்க வேண்டும் கடந்த காலத்தில் இந்தியாவை சரியாக கையாள தெரியாததால் அதன் விளைவை அனுபவித்துள்ளோம் என்றார்.

வசந்த முதலிகேவுக்கு இன்றுவரை மறியல்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இதனையடுத்து, சட்டமா அதிபரின் கருத்தை நீதிமன்றம் பெறும்வரை கொழும்பு மேலதிக நீதவான் தரங்க நில்மினி மஹவத்த அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசு தனித்துப் போட்டியிட யோசனை

சுமந்திரன் எம்.பி. கருத்து

(வவுனியா நிருபர்)

தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக முகம் கொடுப்பது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் ஆராயப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்டம் நேற்று முன்தினம் (11) வவுனியா, குடியிருப்பு கலாசார மண்டபத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெற்றது. அதன் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. தற்போது ஆரம்பமாகவுள்ளதாக கூறப்படும் அரசியலமைப்பு விடயங்கள் குறித்து கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஆராயப்பட்டது. அத்துடன் உள்ளூராட்சி மன்ற வட்டார எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டமை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அரசியல் தீர்வு

அரசியல் தீர்வு விடயத்தில் ஏற்கனவே தமிழ் தேசிய கட்சிகளோடு பேசி மூன்று விடயங்களை அரசாங்கத்திற்கு முன் வைத்துள்ளோம். அரசாங்கத்திடம் தற்போது அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும், தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்படவேண்டும், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்.

இரண்டாவதாக தற்போது அரசியலமைப்பிலும் சட்டங்களிலும் உள்ள அதிகாரப்பகிர்வு விடயங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

மூன்றவதாக வடக்கு-கிழக்கில் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு முறையில் சமஷ்டி கட்டமைப்பில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற 3 விடயங்களையும் சமாந்தரமாக முன்கொண்டு செல்வதென தீர்மானித்து அரசாங்கத்திற்கு முன் வைத்துள்ளோம்.

சில கால எல்லைகளுக்குள் இவை நிறைவேற வேண்டும் எனவும் அரசாங்கத்திற்கு சொல்லவுள்ளோம். அவற்றை ஏனைய கட்சிகளுடனும் பகிர்ந்து ஒற்றுமையான நிலைப்பாட்டை இந்த பேச்சுவார்த்தையின் போது எடுக்க தீர்மானித்துள்ளோம். தமிழ் தேசிய பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இருக்கும் கட்சிகளை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றம்

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் சம்பந்தமாக தற்போது இடம்பெறும் எல்லை மீள் நிர்ணயம் தொடர்பில் ஆராய்ந்துள்ளோம். இந்த எல்லை மீள் நிர்ணயம் சில இடங்களில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. அவற்றை உடனடியாக ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்துவதாகவும், அத்தோடு 60இற்கு 40 என்ற வீதத்தில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதாக உள்ள சட்டம் 70இற்கு 30 ஆக மாற்றப்பட வேண்டும் என்பதை நாடாளுமன்றத்திலும் அரசாங்கத்திற்கும் தெரியப்படுத்துவதாகவும் தீர்மானித்துள்ளோம்.

கட்சி மாநாடு

அடுத்த மத்திய செயற்குழு கூட்டம் எதிர்வரும் 17, 18ஆம் திகதிகளில் இடம்பெறும். அங்கு எமது கட்சியின் தேசிய மாநாடு தொடர்பான திகதியை தீர்மானிப்போம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு தேர்தலுக்கு முகம் கொடுக்கும் முறை

தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக முகம் கொடுப்பது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் இவ்விடயம் ஆராயப்பட்டுள்ளது. வட்டார ரீதியாக ஒரு வீதமும் அதற்கு மேலதிகமாக விகிதாசார முறையில் இன்னொரு வீதமும் சேர்த்துக்கொள்ளப்படுவது தொடர்பில் சென்ற முறை எமக்கிருக்கும் அனுபவங்களின் அடிப்படையில் பார்த்து தனித்தனியாக போட்டியிட்டால் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கூடுதலான உறுப்பினர்கள் கிடைக்குமா, இல்லையா என்கின்ற தொழில்நுட்ப ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோம். அது தொடர்பில் நாம் சிந்திப்போம்.

அரசியல் கைதிகள்

ஜனாதிபதியுடனும் நீதி அமைச்சருடனும் நான் பேசியபோது அரசியல் கைதிகள் 32 பேர் இருப்பதாக தெரிவித்துள்ளனர். அதில் ஜனாதிபதியின் மன்னிப்பில் விடுதலை செய்யப்படக்கூடியவர்கள் எவருமில்லை என்ற கருத்தும் கூறப்பட்டது. எனினும், ஜனாதிபதி அதனை மீள் பரிசீலனை செய்வதாக தெரிவித்துள்ளார். அரசியல் ரீதியில் அவர்கள் குறித்த கொள்கையில் செயற்படுகின்றனர். அதாவது தலதா மாளிகைக்கு குண்டு வைத்தவர்கள், மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் குண்டு வைத்தவர்கள், அரசியல் படுகொலைகளில் குற்றவாளிகளாக காணப்பட்டவர்களை விடுவிப்பதில்லை என முடிவு அவர்களிடம் காணப்பட்டது. எனினும், அவர்கள் நீண்டகாலம் சிறையில் இருந்திருக்கின்றனர் என்ற அடிப்படையில் அதனை மறுபரிசீலனை செய்வது என தெரிவித்துள்ளனர்.

சம்பந்தருக்காக புதியவரை நியமிப்பது

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பலவித சிக்கல்களை கையாள்வதற்கு ஒரு பொறிமுறை அவசியம் என்ற அடிப்படையில் தலைவர் சம்பந்தருடன் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. நானும் மாவை சேனாதிராஜாவும் சம்பந்தரை சந்தித்து கலந்துரையாடினோம். அவர் அதனை வெவ்வேறு விதத்தில் கையாள்வதாக கூறியிருக்கின்றார். எனவே, அவ்விடயங்கள் கையாளப்படும் என நம்புகின்றோம் எனத் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு 'ஸம் ஸம் பவுண்டேஷன்' உதவி

(அஷ்ரப் ஏ.சமத்)

2023 ஆண்டு இலங்கையிலுள்ள பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள், உபகரணங்கள், புத்தகப் பைகள் மற்றும் பாதணிகளுக்கான வவுச்சர் வழங்குதல் போன்ற திட்டங்களை இம்முறையும் கல்வியமைச்சுடன் இணைந்து 'ஸம் ஸம் பவுண்டேஷன்' செயற்படுத்தி வருகின்றது.

இவ்வருடத்திற்காக 16 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு 72 மில்லியன் ரூபாவுக்கான திட்டம் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் 'ஸம் ஸம் பவுண்டேஷன்' இன் ஸ்தாபகத் தலைவர் யூசுப் நிப்தி மௌலவி, நிறைவேற்று அதிகாரி மொஹமட் ஹிசாம், வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, ரஞ்சித் பண்டார மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள், நன்கொடையாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அதிதிகளினால் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களின் கல்வி பணிப்பாளர்களிடம் இத்திட்டங்களுக்கான காசோலைகள் கையளிக்கப்பட்டன.

கடந்த 10 வருடங்களாக 'ஸம் ஸம் பவுண்டேஷன்' உதவித் திட்டங்களாக இலங்கையில் நாலா பாகங்களிலும் வீடமைப்பு, வறிய குடும்பங்களுக்கான சுயதொழில் முயற்சிகள், குடிநீர்த் திட்டங்கள், புலமைப்பரிசில் திட்டம் இளைஞர்-யுவதிகளுக்கான தலைமைத்துப் பயிற்சி, சர்வமத இன நல்லிணக்கத் திட்டம் போன்றவற்றைச் செயற்படுத்தி நாடு முழுவதிலும் மூவினங்களுக்கும் பாரிய சேவைகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மாநகரசபையால் மானிப்பாய் பிரதேச சபைக்கு கழிவகற்றல் வாகனங்கள் அன்பளிப்பு

தென்பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுடன் நட்புறவை ஏற்படுத்தும் வகையில் மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளரும் பிரதேசசபை உறுப்பினர்களும் கடந்த வருட இறுதியில் கொழும்பு மாநகரசபைக்கான நட்புறவு பயணத்தை மேற்கொண்டனர். அதன் விளைவாக இவ்வருட ஆரம்பத்தில் கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனநாயக்க தலைமையில் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

இதன்போது வழங்கிய வாக்குறுதியின்படி கொழும்பு மாநகர சபையில் காணப்பட்ட, மீள் பாவனைக்கு உட்படுத்தக்கூடிய நிலையில் இருந்த 7 வாகனங்கள் கொழும்பு மாநகர சபையால் உரிய அனுமதிகள் பெறப்பட்டு திருத்தப்பட்டு கொழும்பு மாநகர சபையின் அழைப்பின் பேரில் அங்கு விஜயம் செய்த மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் தலைமையிலான உறுப்பினர் குழாமிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

பெயர் மாற்றம்

கற்பிட்டி, மணல்தோட்டம், முபீன் பள்ளி வீதியில் வசிக்கும் **'றுவான் இமாந்த'** ஆகிய நான் 2005ஆம் ஆண்டு முதல் இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை **'முஹம்மது அன்வர்' (Mohammathu Anver)** என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

முஹம்மது அன்வர் (Mohammathu Anver)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

12.12.2022 நாணய மாற்று வீதம்

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	131 63	142 34 8
கனேடியன் டொலர்	150 6625	162 8 48
சீன யுவான் (ரென்மின்பி)	4 6 0	42 7338
யூரோ	266 82	281 4665
ஜப்பான் யென்	1 5062	1 616
சிங்கப்பூர் டொலர்	153 0325	164 7 7
ஸ்ரேலிங் பவுன்	327 7 48	344 7306
சுவிஸ் பிரான்ங்	270 1225	3 2 68
ஐ.அ.டொலர்	250 0862	260 6080

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	852 1672
குவைட்	குவைட் தினார்	0,072 85 8
ஓமான்	ஓமான் றியால்	832 1646
கட்டார்	கட்டார் றியால்	87 8157
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 4665
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 7645

திகதி 11.12.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4966
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.8,482,900.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 5 6 3 5 8 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.18,971,173.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3208
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,699,180.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 04 34 49 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,810,058.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1421
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,707,820.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 4 8 7 9 5 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,900,740.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 996
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,948,120.00
C 17 42 64 70
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 136,317,352.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 275
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.6,496,900.00
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 15 24 41 47 விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,615,367.00

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1314
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,861,160.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.285,902,662.00
A 06 13 19 54 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk

விழுந்தாலும் விருட்சமாக மீண்டெழுவோம்

ஜீவன் தொண்டமான் எம்.பி. தெரிவிப்பு



(எஸ்.கணேசன்)

தோல்வியே சிறந்த ஆசான். அதிலிருந்து பாடங்களை கற்றுக்கொண்டு, முன்னேறும் வழிகளை நாம் அடையாளம் காணவேண்டும். எனவே, தோல்விகளைக் கண்டு துவண்டுவிட வேண்டாம். அடிபட்டும் அடிபணிந்து வாழ்ந்தும் போகும். இனி விழுந்தாலும் விதையாக விழுவோம். விருட்சமாக மீண்டெழுவோம் - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை ஸ்டோனிகிளிப் தமிழ் மகா வித்தியாலயம், திம்புள்ள தமிழ் மகா வித்தியாலயம், மவுண்ட்வேர்னன் தமிழ் மகா வித்தியாலயம், போகாவத்தை சிங்கள வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த. சா/தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு, கொட்டகலை ஸ்டோனிகிளிப் ஜொலி போய்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் கொட்டகலை பிரதேச சபை உறுப்பினருமான எஸ்.டெக்மன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மில் சிலர் தோல்வியைக் கண்டு அஞ்சுகின்றனர். தோல்வியைக்கூட எமக்கு சாதகமான வியமாக மாற்றிக்கொள்ள வேண்டும். எமது பலம் எது, பலவீனம் எது என்பதை அதனூடாக அறியலாம். எங்கு தவறு இடம்பெற்றுள்ளது என்பதையும் உணரலாம். தோல்வி என்பது சிறந்த ஆசான். பல பாடங்களை நாம் கற்றுக் கொள்ளலாம். தோற்றுவிட்டால் எம்மை ஒதுக்கி, கண்டுகொள்ளாத இதே சமூகம்தான் தோல்வியிலிருந்து மீண்டுவிட்டால் வாழ்த்தி வரவேற்கும் - மாலைபோட்டு மரியாதை செலுத்தும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். எனவேதான் தோல்வியைக் கண்டு அஞ்ச வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன்.

நாம் அடிமட்டத்தில் இருக்கின்றோம். இனியும் பின்நோக்கிச் செல்ல இடமில்லை. எனவே, நாம் முன்னேற வேண்டும். அதற்காக மட்டுமே முயற்சிக்க வேண்டும். போதைவஸ்து பாவித்தால் உறக்கம் வராது - நன்கு படிக்கலாம் என ஏமாற்றி மாணவர்களை சிலர் போதைக்கு அடிமையாக்குகின்றனர். போதை உயிரை பறிக்கக்கூடியது. எனவே, அந்த அபாயத்துக்குள் விழுத்துவிட வேண்டாம்.

30 வருடங்கள் எமக்கு பிரஜாவுரிமை இருக்கவில்லை. பிறப்பிடத்தப்பட்டுள்ளோம். இந்நிலையில், போதைப்பொறிக்குள்ளும் நாம் சிக்கிவிடக்கூடாது. இது விடயத்தில் பெற்றோர் விழிப்பாக இருக்கவேண்டும். இதற்கு மேலும் அடிபணிந்தோ, அடிவாங்கியோ வாழ முடியாது. முன்னேற வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக இ.தொ.காவின் நிதிச் செயலாளரும் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன், கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் ராமு மணி பிரசாத், உப தலைவர் ஐ.பாலசுப்பிரமணியம், இ.தொ.காவின் இளைஞர் அணி பொதுச் செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், கழக உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தோட்ட அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதேவேளை, போகாவத்தை மற்றும் ஸ்டோனிகிளிப் வட்டார கரப்பந்தாட்ட போட்டிகளை பரிசளிப்பு நிகழ்வும் ஸ்டோனிகிளிப் வட்டார கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளை பரிசளிப்பு நிகழ்வும் இந்நிகழ்வில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தபால் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் (11) முதல் நாடு தழுவிய பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் நுவரெலியா பிரதான தபால் அலுவலகம் மற்றும் நானு-ஓயா தபால் அலுவலகங்கள் என்பன செயலிழந்து காணப்பட்டதுடன், தபால் சேவை மற்றும் அலுவலகக் கடிதப் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. பல்வேறு தேவைகளின் பொருட்டு தபால் நிலையத்திற்கு வருகை தந்த பொதுமக்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் எனப்பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (படங்கள்:- நுவரெலியா மேலதிக நிருபர்)

இயற்கை சூழலை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் நானு-ஓயா பொலிஸாரினால் மரங்களை நாட்டும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. நு/எபற்ஸ்போட் தமிழ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை இணைத்து நானுஓயா பிரதான வீதி ஓரமாகவும் பாடசாலையை சுற்றியும் மரம் நாட்டும் நடவடிக்கையில் அவர்கள் கடந்த வாரம் ஈடுபட்டிருந்தனர். இதன்போது நானு-ஓயா பொலிஸ் நிலையப் பொறுப்புதிகாரி சுகத் வீரசிங்ஹ, பொலிஸார், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு மரங்களை நாட்டி வைத்தனர்.

(நுவரெலியா மேலதிக நிருபர்)

ரம்பொடை ஹரிஹரபுரம் ஞானவரத ஐயப்பன் தேவஸ்தானத்தில் நேற்று (12) நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரும் அவரது பாரியாரும் கலந்துகொண்டனர். இதன்போது இராஜாங்க அமைச்சர் வரவேற்கப்படுவதையும் பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டிருப்பதையும், நினைவுச்சின்னம் வழங்கப்படுவதையும் கலந்துகொண்ட அடியார்களையும் பூஜைகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

(பதுளை நிருபர்)

நானு-ஓயாவில் மின் உபகரணங்கள் சேதம்

(நுவரெலியா மேலதிக நிருபர்)

நானு-ஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானு-ஓயா டெல்மோர் தோட்டத்தில் நேற்று திங்கட்கிழமை காலை உயர் மின்னழுத்தம் காரணமாக பொதுமக்களின் வீடுகளிலுள்ள மின்சார உபகரணங்கள் பழுதடைந்துள்ளன.

நேற்றுக் காலை 6.45 மணியளவில் இரு தடவை மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் உயர் அழுத்தத்துடன் மின்சாரம் விநியோகிக்கப்பட்டதால் தாம் பயன்படுத்திவந்த மின்சார உபகரணங்களான தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், இலத்திரனியல் சமையலறை சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பழுதடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 10 வீடுகளில் இப்பாதிப்பு ஏற்பட்டுள்ள தெனவும், எனவே இதனை ஆராய்ந்து சேதமான பொருட்களுக்கு இழப்பீடு வழங்குமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் பாரதியார் விழா

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் துதரகத்தின் ஏற்பாட்டில் பாரதியார் விழா நேற்று முன்தினம் (11) மாலை நல்லூர் தூர்காதேவி மண்டபத்தில் துணைத் தூதர் நடராஜ் ராகேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் கம்பவாரிதி இ. ஜெயராஜை நடுவராகக் கொண்டு, 'பாரதி தம் நெஞ்சில் ஆழப் பதிவது - சமூகப் பாடல்களாலா? பக்திப் பாடல்களாலா?' என்ற பொருளில் பட்டிமன்றம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் கம்பநேசன், இ.வாசுதேவா, வலம்புரி ந.விஜயகுந்தரம், செந்தமிழ்ச் செல்வருவி ச.லலீசன் ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் தொடக்கமாக நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா இயக்குநர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாள்கையில் பாரதி பாடல் மற்றும் நடனமும் இடம்பெற்றது.

வவுனியாவில் தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு; மக்கள் அவதி!

(வவுனியா நிலையா)

தபால் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் (11) தொடக்கம் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம், தபால் காரியாலயங்கள் மற்றும் நிர்வாக காரியாலயங்களில் எந்தவிதமான கன்கானிப் புமின்றி மேலதிக கொடுப்பனவுக் குறைப்பு, தபால் தினைக்கள உத்தியோகத்தர்க ளின் இடமாற்ற சபையின் மேன்முறையீட்டு சபையின் நடவடிக்கையிலிருந்து தொழிற்சங் கத்தை நீக்கியமை, தபால் கட்டண மறுசீரமைப்பு தொடர்பில் பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு ஆளாகி தபால் தினைக் களத்தின் வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சி டைவதைத் தடுப்பதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படாமை போன்ற பல விடயங்களுக்கு எவ்வித தீர்வும் எட்டப்படா மைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாகவே இப்பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கு அதரவு வழங்கும் வகையில் வவுனியா பிரதான தபால் நிலையம் மூடப்பட்டுள்ளது. இதன் காரணமாக கடிதங்கள் - பொதிகள் அனுப்ப வந்த மக்கள் மற்றும் கொடுப்பனவு பெறுவதற்கு வருகை தந்த முதியவர்கள் எனப் பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக நடனத்துறை அனுமதியில் மோசடி; பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் முறைப்பாடு

(யாழ். நிருபர்)

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் நடனத்துறைக்குப் புதிய மாணவர்களை உள்வாங்குவதற்காக நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் (2021) நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று, நுண்கலைப் பாடங்களில் விசேட திறமை உள்ளவர்களை உள்வாங்குவதற்கான தெரிவுப் பரீட்சைகள் அத்தத்துப் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படுவது வழமையாகும். அவ்வாறு யாழ். பல்கலைக்கழக நடனத்துறையால் நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சையிலேயே முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

2022 - 2023ஆம் கல்வியாண்டுக்கான வெட்டுப்புள்ளிகள் வெளிவந்துள்ள நிலையில், திறமையான பல மாணவர்கள் நுண்கலை நடனத்துறை அனுமதியில் தெரிவுசெய்யப்ப டாமை கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுன் தொடர்பு கொண்டு கேட்டபோது, நுண்கலைப் பாடங் களுக்கான தெரிவு அந்தந்தப் பல்கலைக்கழகங்களினால் நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சைகளின் அடிப்படையில், மாணவர்கள் பெற்ற இசட் ஸ்கோர் புள்ளி ஒழுங்கில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகங்களின் தெரிவு என்பது மாணவர்கள் குறித்த பாடத்தில் வெளிப்படுத்திய அடைவு மட்டங்களின் அடிப்படையில் அமையும் என்றும் விளக்கமளிக் கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தேவைப்பாட்டின் அடிப்படையில், மாகாண மற்றும் தேசிய ரீதியிலான சாதனைகள் பெற்ற மற்றும் பிரபல பாடசாலைகளின் ஆசிரியர்களிடம் பயின்ற பல மாணவர்கள் வேண்டுமென்றே பழிவாங்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவர்க ளின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

நாடகத்துறை விரிவுரையாளர்களின் இத்தகைய செயற்பாடு குறித்து துணைவேந்தரை நேரடியாகச் சந்தித்து முறைப்பாடு செய்ய முயன்ற போதிலும், நடனத்துறையினர் இதற்கு அனுமதிக்கவில்லை. இதனையடுத்து பாதிக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி வழங்குமாறு கோரி யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரிடமும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விடமும் முறைப்பாடுகள் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஈஸ்ரர் தாக்குதல் சூத்திரதாரிகள் கண்டறியப்பட மக்கள் காங்கிரஸ் தொடர் அழுத்தம் கொடுக்கும்!

பேராளர் மாநாட்டில் அக்கட்சியின் தலைவர் ரிஷாட் அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகளும் அதற்கு பின்புலத்தில் நின்றவர்களும் கண்டறியப்பட வேண்டும் என்பதிலும், முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அறியாயமாக எரித்தவர்கள் கண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும், பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுதியுடன் இருப்பதாக கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

முஸ்லிம்களை மிக மோசமாக பாதித்த இந்த விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்காத எவருக்கும் எமது கட்சி ஒத்துழைப்பு வழங்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பேராளர் மாநாடு, கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் தலைமையில், கடந்த சனிக்கிழமை (10) தெஹிவளை, ரோஸ்வூட் செலோனில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பல சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் மத்தியிலேயே கட்சியை வழிநடத்தி வருகின்றோம். சிறுபான்மை கட்சிகள் தேவையா, இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்கள் ஒரு காலத்தில் இடம்பெற்றன. பெரும்பான்மை கட்சிகளில் உள்ள சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்கள், தமது இனத்துக்கு அநீதி இழைக்கப்படும்போது தட்டிக் கேட்க வக்கத்தவர்களாகவும் பேசாமடந்தைகளாகவும் இருந்தவேளை, தமது சமூகத்தின் உரிமைக்காக குரல் கொடுப்பதற்காகவே முஸ்லிம் கட்சிகள் தோற்றம் பெற்றன.

அந்தவகையில், கால ஓட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் உருவாகி, மிக குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்றது. எமது கட்சிக் கொள்கையில் பற்றுக்கொண்டவர்கள் இதில் சங்கமமாயினர்.

முஸ்லிம்கள் மாத்திரமன்றி இற்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் ஆகியோரும் எமது கட்சியில் அங்கத்துவம் பெற்றனர். பன்முகத்தன்மையும் இனவாதமற்ற போக்கும் சகல இனத்தையும் சமமாக மதிக்கும், கருதும் பாங்கும் இருந்ததினால்தான் மக்களின் அங்கீகாரம் கிடைத்தது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் வடக்கு-கிழக்கில் நாங்கள் பல சபைகளை கைப்பற்றினோம். அதுவும் நூறு சதவீதம் தமிழர்கள் வாழும், யுத்தத்தால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச சபையை நாம் கைப்பற்றினோம். மன்னாரில் 70 சதவீதம் தமிழர்கள் வாழும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் 11 வட்டாரங்களையும் கைப்பற்றி ஆட்சியை பிடித்தோம்.

கிறிஸ்தவர் ஒருவரை தவிசாளர் ஆக்கினோம். அவர் மரணித்ததன் பின்னர் இந்து சகோதரர் ஒருவரை தவிசாளர் ஆக்கினோம். அதேபோன்று, வட மாகாண சபையில், தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் வவுனியாவில் இருந்து பௌத்தர் ஒருவரை எமது கட்சியின் சார்பில் மாகாண சபைக்கு அனுப்பினோம். சமத்துவம், சகோதரத்துவம், இன ஒற்றுமை ஆகியவற்றினால எமது கட்சி பயணிப்பதனாலதான், அனைத்து இன மக்களையும் அரவணைத்து செல்ல முடிகின்றது. அனைத்து சமூகத்தவரையும் அதிகாரத்தில் அமர்த்த முடிகின்றது.

எந்தவிதமான பேதமும் இன்றி நாம் பயணிப்பதில் காழ்ப்புணர்வு கொண்ட அரசியல் சக்திகள் எம்மை வீழ்த்த சதி செய்தன. இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி, தலைமையையும் கட்சியையும் சிதைக்கத் தலைப்பட்டனர். தலைமை மீது போலிக் குற்றச்சாட்டுகளை சுமத்தி சிறையில் அடைத்தனர்.

இல்லாத பொல்லாததை எல்லாம் ஊடகங்கள் வாயிலாகவும் மேடைகள் மூலமும் விஷமாகக் கக்கி, தலைமையையும் கட்சியையும் சிதைக்க முயன்றனர். இனவாதத்தை மூதனமாக்கி ஆட்சியை பிடித்தனர். ஆனால், எந்தவொரு குற்றச்சாட்டுகளும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

அத்துடன், சட்டத்துறை நோ்மையாக செயற்பட்டதால் பல குற்றச்சாட்டுக்களிலிருந்து தலைமை நிரபராதி என்று தீர்மின்றம் விடுதலை செய்துள்ளது.

அது மாத்திரமன்றி, கட்சிப் போராளிகளின் தியாகத்தினாலும் நமது அர்ப்பணிப்புகளினாலும், மக்கள் காங்கிரஸ் மூலம் பதவிக்கு வந்தவர்கள், கட்சிக் கொள்கைக்கு மாறாக செயற்பட்டு, துரோகம் இழைத்தனர். அவர்களும் எமது கட்சிய அழிக்க கங்கணம் கட்டி வருகின்றனர்.

எனினும், மக்கள் ஆதரவு பெற்ற இந்தக் கட்சி தொடர்ந்தும் தூரிய வழியில், முன்னேற்றப் பாதையில் பயணிக்கும் என்பதை உறுதியாக கூறுகின்றோம்.

நாங்கள் கடந்த காலங்களில் பலவேறு சமூக பிரச்சினைகளுக்காக முன்னின்று உழைத்தவர்கள். பிரச்சினைகளை கண்டு ஒடி ஒளிந்தவர்கள் அல்லர். எதிர்வரும் காலங்களிலும் இந்தக் கட்சி மக்கள் நலனுக்காகவே காரியமாற்றும்" என்று தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் 13 ஆம் திகதி இனப்பிரச்சினை தொடர்பில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் அமைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனவும், தமிழர்களும் முஸ்லிம்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, மகிழ்ச்சியாக வாழக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகளை மக்கள் காங்கிரஸ் முன்வைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டி பூரணவத்தை லைட் ஹவுஸ் தேவாலயத்தின் நத்தார் இன்னிசை கீத ஆராதனை போதகர் வணபிதா கொட்வின் சிவராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விசேட போதகராக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த வண.டேவிட் பிரேங்ளின் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், பெரும் எண்ணிக்கையிலான பக்த அடியார்களும் கலந்துகொண்டனர். (படங்கள்: இக்பால் அலி)

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து விசேட ரயில் சேவைகளை நடத்த யோசனை

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு வரும் விமானப் பயணிகளுக்கு ரயில் மூலம் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர்கள் விசேட கவனம் செலுத்தியுள்ளனர்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கப்பல், கப்பல் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் உள்ள கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் துறைமுகம் ஆகியவற்றில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் இந்த விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு வரும் விமானப் பயணிகளுக்கு ரயில் மூலம் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னைக்கான விமான சேவைகள் நேற்று திங்கட்கிழமை (12) ஆரம்பமாகின.

இது பால் மா வரிசை

நாட்டில் மீண்டும் பால் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், பால் மாவை வாங்க வரிசையில் காத்திருக்க வேண்டியநிலை பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி பிரதேசத்திலுள்ள உள்ளூர் பால் மா சந்தைக்கு முன்பாக நீண்ட வரிசை காணப்படுகின்றது.

சர்வதேச பௌத்த பிக்குகளின் பிரதிநிதிகள் குழு சபாநாயகர் யாப்பாவுடன் சந்திப்பு

சர்வதேச பௌத்த வலையமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிக்குகள் மற்றும் பிக்குணிகளின் குழு அண்மையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்திருந்தது. மியன்மார், தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பௌத்த பிக்குகள் மற்றும் பிக்குணிகள் இந்தக் குழுவில் அங்கம் வகித்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்ட இச்சந்திப்பில் பாலின சமத்துவம், இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டிய குழுவினர் மற்றும் இது தொடர்பான தேசிய கொள்கையைத் தயாரிப்பது போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது மியன்மாரின் கலாசார பாரம்பரியமாகக் கருதப்படும் பெறுமதிமிக்க புத்தகமொன்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு வழங்கப்பட்டது. இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு 30 வருடங்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க 20 வருடங்களும் எடுத்ததாகவும், இப்புத்தகம் தமது நாட்டின் பாரம்பரியமாகக் கருதப்படுகிறது என்றும் வருகை தந்திருந்த மியன்மார் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

இலங்கையிலுள்ள பௌத்த பிக்குமாருக்கு தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாமை தொடர்பில் இங்கு வருகை தந்திருந்த இந்நாட்டின் பிரதிநிதிகள் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இதனால் இளம் பௌத்த பிக்குமார் அரசாங்கம் நடத்தும் பரீட்சைகளில் தோற்றுவது பிரச்சினைக்குள்ளாகியிருப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் பிரதி சபாநாயகர் அலுத் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, ரவுப் ஹக்கீம், பிரேம்நாத். சி தொலவத்த, கலாநிதி ஹரினி அமரசூரிய ஆகியோரும் நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சுஜானி ரோஹணதீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொஹிதீன் நேற்று திங்கட்கிழமை காலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவுப் ஹக்கீமை சந்தித்து இலங்கை மற்றும் இந்திய அரசியல் நிலைவரங்கள் குறித்து பேசினார். இச்சந்திப்பின்போது ரவுப் ஹக்கீமின் சகோதரர் டொக்டர் ஹாபீஸ் நாஸ் எழுதிய புத்தகத்தை பேராசிரியர் கே.எம்.காதர் மொஹிதீனுக்கு வழங்கினார். இதன்போது ராஜரிய ஆர்.டி.பி. கல்லூரியின் தலைவர் டொக்டர் ஆர்.டி.பி. தாவூது பாட்ஷா, திருச்சி ஊடகவியலாளர் எம்.கே.ஷாகுல் ஹமீது, புத்தூநாத்தம் மௌலவி சையது அபுதாஹிர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (படங்கள்: திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

காவேரி கலா மன்றத்தின் அனுசரணையுடன் 'இருள் நீக்கும் பேரொளி' எனும் மாபெரும் நத்தார் இன்னிசை கீத ஆராதனை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள கானான் ஜெப ஆலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் காவேரி கலா மன்றத்தின் இயக்குனர் வணபிதா யேசுவா அடிகளார் உள்ளிட்ட முக்கிய போதகர்களுடன் பக்த அடியார்களும் கலந்துகொண்டதை படங்களில் காணலாம். (படங்கள்:- இக்பால் அலி)

போரதீவுப்பற்று பகுதியில் அடையாளப்படுத்தப்பட்ட நிலங்களில் எல்லைக் கற்களை நடுவதற்கு முயற்சி

தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து முயற்சி கைவிடப்பட்டது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், படுவான்கரைப் பெருநிலப்பரப்பிற்குட்பட்ட போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் எல்லைக் கற்கள் இடுவதற்காக நேற்று (12) தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் விஜயம் செய்திருந்தனர். இதனையறிந்த அப்பகுதி மக்கள் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டனர்.

தமது நடவடிக்கைகளுக்கு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்புத் தெரிவிப்பதாக அறிந்த தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் ஆரம்பத்தில் வெல்லாவெளியில் அமைந்துள்ள பிரதேச செயலகத்தினுள் சென்று பிரதேச செயலாளருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். இதனையறிந்த மக்கள் பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா போரதீவுப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் யோ.ரஜனி மற்றும் பிரதேச சபை உறுப்பினர் தியாகராஜா உள்ளிட்ட பலர் பிரதேச செயலகத்திற்கு சென்று பிரதேச செயலாளருடனும், தொல்லியல் திணைக்களத்திலிருந்து எல்லைக் கற்கள் இடுவதற்கு வருகை தந்த அதிகாரிகளிடமும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

பின்னர் தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை தொல்லியல் திணைக்களம் அடையாளப்படுத்தி எல்லைக்கற்கள் இடுவதற்கு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். தங்களது நடவடிக்கைகளை கைவிடுமாறும், இவ்விடயம் தொடர்பில் கிராமமட்ட அமைப்புகளிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும், எதிர்வரும் தைப்பொங்கல் தினத்திற்குப் பின்னர் ஒரு நாளில் கலந்துரையாடுவதென எடுத்துரைத்ததன் அடிப்படையிலும், அங்கிருந்து தொல்லியல் திணைக்கள அதிகாரி ஒருவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தொலைபேசியில் உரையாடி இவ்விடயத்தை தெரியப்படுத்தியதற்கு இணங்கவும், அவர்களது நடவடிக்கை கைவிடப்பட்டது. தமிழர்களின் பூர்வீக இடங்களாகவுள்ள தொல்லியல் பகுதியென அடையாளப்படுத்தப்பட்ட வேத்துச்சேனை, வெல்லாவெளி கல்லடிப்பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றிற்கு இதன்போது கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகள் நேரில் சென்று நிலமையை அங்கு கூடிநின்ற மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

'கடிகாரப் பறவைகள்' கவிதை நூல் வெளியீடு

(ஆலையடிவேம்பு நிருபர்)

மகாகவி பாரதியாரின் 140ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட திருவதிகை கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் முதலாவது நூலாக வெளிவரும் திருக்கோவில் ஈழகவி கார்த்திகேசுவின் 'கடிகாரப் பறவைகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று (12) சிறப்பாக நடைபெற்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தரும் ஊடகவியலாளரும் சமூக ஆர்வலரும் கவிஞருமான திருக்கோவில் கார்த்திகேசுவின் படைப்பில் உருவான கவிதை நூலே இவ்வாறு வெளியிடப்பட்டது.

தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதின பணிப்பாளரும் ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தருமான கண. இராஜரெத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நீ.அங்குசநாதக்குருக்கள் ஆன்மீக அதிதியாக கலந்துகொண்டதுடன், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கலந்துகொண்டார்.

அதிதிகள் வரவேற்பு மங்கள விளக்கேற்றல் இறைவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் வரவேற்புரையை ஓய்வுநிலை அதிபர் எஸ்.பி.நாதன் வழங்கினார். தலைமையுரையை கண. இராஜரெத்தினமும், ஆசியுரையை சிவஸ்ரீ நீ.அங்குசநாதக்குருக்களும் வழங்க, இலக்கிய சிறப்புரையை ஆய்வாளர் சிராஜ் மசூர் எழுகவி எம்.ஐ.எம்.ஜெமீல், கவிஞர் க.கிருஸ்ணமூர்த்தி, பாவேந்தல் பாலமுனை பாறுக் ஆகியோரும் நூல் அறிமுக உரையை சர்வதேச இலக்கிய செயற்பாட்டாளர் ரியாஸ் குரானாவும், நூல் ஆய்வுரையை கலாபூஷணம் முல்லை வீரக்குட்டியும் நிகழ்த்தினர்.

இதேநேரம் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டதுடன், கவிதை நூலை பிரதம அதிதி அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வெளியீடு செய்துவைத்தார்.

நிகழ்வில் திருக்கோவில் மண்ணின் முதல் பேராசிரியர் எஸ்.குணபாலன் மற்றும் ஓய்வுநிலை அதிபர் எஸ்.பி.நாதன் ஆகியோர் நூலாசிரியர் கார்த்திகேசுவின் ஏற்பாட்டில் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதேநேரம் நூலாசிரியரின் இலக்கிய முயற்சியைப் பாராட்டி பலரும் இணைந்து நூலாசிரியர் ஈழகவி கார்த்திகேசுவுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

இறுதியாக ஏற்புரையை நூலாசிரியர் ஏ.எஸ்.கார்த்திகேசு நிகழ்த்தினார்.

தாதியின் கவனயீனத்தால் பறிபோன உயிர்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கேஸ்ரிக் காரணமாக சேர்க்கப்பட்ட இளம் பெண்ணொருவர் நேற்று (12) அதிகாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒன்பதாம் திகதி கேஸ்ரிக் மற்றும் தாங்க முடியாத குளிர் காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை, தெவனிபியவர பகுதியைச் சேர்ந்த ஐந்து மாத கைக்குழந்தையின் தாயாரான குணசிங்க முதியன்சலாகே ஹன்சிகா பியூமாலி சமரசேன (23 வயது) எனவும் தெரியவருகின்றது.

குறித்த இளம் பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, 15ஆம் விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், அங்கு கடமையிலிருந்த பெண் ஊழியர் ஒருவர் தாதியரிடம் குறித்த பெண் மயக்கமுற்ற நிலையில் இருப்பதாகக் கூறியபோதிலும் அந்நோயாளி குறித்து கடமை நேர வைத்தியர்களுக்கு தெரியப்படுத்தவில்லை எனவும் குறித்த சிற்றூழியர் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண்ணின் பிரேத பரிசோதனை நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், பித்தப்பை அறுவை சிகிச்சைக்கு பின்னர் சதையில் ஏற்பட்ட கிருமித்தொற்று காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் எனவும் சட்ட வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் கடந்த சில மாதங்களாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் மரணங்களின் வீதம் அதிகரித்து வருவதாகவும் அதிகளவிலான முறைப்பாடுகள் நோயாளர்களை கவனிக்காமையே காரணம் எனவும் வைத்தியசாலையின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அனுமதிப்பத்திரமின்றி மண் ஏற்றிவந்தவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம்

(கோணாவத்தை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மண் ஏற்றிவந்த ரிப்பர் வாகன உரிமையாளர்களுக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மண் ஏற்றிவந்த வாகனத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த ரிப்பர் வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (12) ஆஜர்படுத்தியபோது 10,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளரால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது

மட்டக்களப்பு போதைப்பொருள் ஒழிப்பு விசேட பொலிஸ் குழுவினரால் 8 நாட்களில் 16 பேர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு விசேட பொலிஸ் குழுவினரால் மட்டக்களப்பு, கொக்குவில், ஏறாவூர் பொலிஸ் பிரிவில் 8 நாட்களில் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் 16 பேரை கைதுசெய்து அந்தந்த பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக விசேட பொலிஸ் குழுவினர் தெரிவித்தனர்.

நாட்டில் போதைப்பொருள் அதிகரித்ததையடுத்து, பொலிஸ் மா அதிபர் உடனடியாக கடந்த டிசம்பர் 3ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் வரையில் போதை ஒழிப்பு வாரமாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மாவட்டத்திலுள்ள தலா 16 பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸாரை தேர்ந்தெடுத்து 3 விசேட குழுக்களை அமைத்து ஒரு குழுவிற்கு 5 பொலிஸ் பிரிவுகள் என்ற ரீதியில் அந்த பொலிஸ் பிரிவுகளில் போதைப்பொருட்களை வியாபாரம் செய்வோர் மற்றும் பாவனை செய்வோரைக் கண்டறிந்து கைதுசெய்யுமாறு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதில் ஏறாவூர், கொக்குவில், மட்டக்களப்பு, ஆயித்தியமலை, வவுணதீவு, பொலிஸ் பிரிவுகளுக்காக அமைக்கப்பட்ட சப் இன்பெக்டர் வை.விஜயராஜ் தலைமையிலான விசேட குழுவினர் கடந்த 3ஆம் திகதிமுதல் 10ஆம் திகதிவரையிலான 8 நாட்களில் மட்டக்களப்பு, கொக்குவில், ஏறாவூர் ஆகிய பொலிஸ் பிரிவில் பாடசாலைக்கு அருகில் சைக்கிளில் தேன்குழல் விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் உட்பட 16 பேரை கஞ்சா, ஐஸ் போதைப்பொருள், ஹெரோயின் போன்றவற்றுடன் கைதுசெய்து அவர்களை அந்தந்த பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாண்டது மெண்டஸ்: வருகிறது 'மோட்சா'

அரபிக்கடலில் இன்று உருவாகிறது புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி

அரபிக்கடலில் இன்று (13) புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகவுள்ளது. இது கேரளத்தின் வடபகுதியில் வளிமண்டல மேலடுக்கில் சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக அரபிக்கடலில் உருவாகும் காற்றழுத்த தாழ்வுப்பகுதியால் எந்த பாதிப்பும் இருக்காது. அந்தமான் கடல் பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகி இன்று அந்தமானை நோக்கி நகரவுள்ளது.

இந்தப் புயலுக்கு 'மோட்சா' (Cyclone Mocha) என பெயரிடப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் உருவான 'மெண்டஸ்' புயல் இந்தியா, தமிழகம் உள்ளிட்ட தென்பகுதிகளையும், இலங்கையின் பல பாகங்களையும் சூறையாடிவிட்டு தணிந்து சென்றுள்ளது. எனினும், இலங்கையின் இதன் தாக்கம் இன்னும் சில காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலையில், இன்று மீண்டுமொரு புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகவுள்ளது.

வங்காள விரிகுடாவில் உருவாக புயலுக்கு ஐக்கிய அரபு இராச்சியம் 'மெண்டஸ்' என பெயர் பரிந்துரை செய்திருந்தது.

இந்நிலையில், அடுத்து இன்று உருவாகவுள்ள புயலுக்கு யேமன் மொழியில் இது மோட்சா (Cyclone Mocha) என பெயர் சூட்டப்படவுள்ளது.

இதுபற்றிய சுவாரஸ்ய தகவல்களைப் பார்க்கலாம்.

வங்கக் கடல், அரபிக் கடல் பகுதியில் உருவாகும் புயல்களுக்கு இந்தப் பகுதியில் அமைந்துள்ள இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், யேமன், கட்டார் உட்பட 13 நாடுகளின் பெயர்கள் சூட்டப்படுகின்றன. இந்த ஒவ்வொரு நாடுகளும் ஆண்டுக்கு 13 பெயர்களை பரிந்துரைக்கும். அந்த வகையில் ஆண்டுக்கு 169 பெயர்கள் புயல்களுக்கு சூட்டுவதற்காக பட்டியலிடப்பட்டிருக்கும்.

அந்தவகையில் வங்கக் கடல், அரபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள பங்களாதேஷ், இந்தியா, ஈரான், மாலைதீவு, மியன்மார், ஓமான், பாகிஸ்தான், கட்டார், சவூதி அரேபியா, இலங்கை, தாய்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், யேமன் ஆகிய நாடுகள் ஆங்கில எழுத்துகளின் அடிப்படையில் இவ்வாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், புதிதாக உருவாகும் புயலுக்கு யேமன் பரிந்துரைத்துள்ள 'மோட்சா' (mocha) என்ற பெயர் சூட்டப்படவுள்ளது. யேமனின் செங்கடல் பகுதியில் அமைந்துள்ள துறைமுக நகரத்திற்கு மொக்கா என்று பெயர்.

இதற்கு பின்னர் வரும் புயலுக்கு பங்களாதேஷ் பரிந்துரைத்துள்ள பிபர்ஜார் என்று பெயர் சூட்டப்படவுள்ளது. இதற்கு வங்க மொழியில் பேரழிவு என்று அர்த்தமாம்.

உலக செய்திகள்

தேர்தலை நடத்த வலியுறுத்தி பெருவில் வெடித்தது போராட்டம்

துப்பாக்கிச்சூட்டில் போராட்டக்காரர்கள் இருவர் பலி; 20 பேர் படுகாயம்

பெருவில் தேர்தல் நடத்த வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 20இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்பாக ஆட்சியை கலைக்க முயன்றதாகக் கூறி கைதுசெய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி பெட்ரோ காஸ்டில்லோவை விடுதலை செய்ய வலியுறுத்தி 4 நாட்களாக அவரது ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களை கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

72ஆவது அகவையில் சுப்பர்ஸ்டார் ரஜினி

தலைவா என்று அவரது ரசிகர்களால் அன்போடு அழைக்கப்படும் சுப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் நேற்று(12) தனது 72ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

உலக முழுவதுமிருந்து அவரது ரசிகர்களும் பல்வேறு தலைவர்களும், திரையுலகப் பிரபலங்களும் அவருக்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித்து மகிழ்ந்தனர்

பல்வேறு திரைப்படங்களில் நடித்து, ஏராளமான ரசிகர் பட்டாளத்தைக் கொண்டிருப்பவர் நடிகர் ரஜினிகாந்த். பல ஆண்டுகாலமாக சினிமா உலகில் அசைக்க முடியாத இடத்தில் இருக்கும் நடிகர்களில் முன்னணியில் இருப்பவரும் இவரே.

குழந்தைகள்முதல் பெயரிவர்கள்வரை இவருக்கு பல தரப்பு ரசிகர்கள் உள்ளனர். இவரது நடிப்புத் திறமை மற்றும் ஸ்ரைல் காரணமாக இவருக்கு ஆரம்பத்தில் ரசிகர்கள் அதிகரித்திருந்தனர். ஆனால், பிறகு அவரது எளிய தோற்றம், மனதில் இருப்பதை அப்படியே பேசுவது, வெளியில் நடிக்கத் தெரியாதது போன்றவற்றால், காலப்போக்கில் ரசிகர்கள் அதிகரித்துவிட்டனர்.

பஸ் நடத்துநராக தனது வாழ்க்கையைத் தொடங்கி, நடிகராகி, பேரும் புகழும் சம்பாதித்த தமிழக மக்களின் மனதில் நீங்க இடம்பிடித்த சுப்பர் ஸ்டார் பற்றி பலரும் அறியாத சில தகவல்கள்...

பெங்களூரில் மராத்தி குடும்பத்தில் பிறந்தவர் ரஜினிகாந்த். ஷிவாஜி ராவ் கெய்க்வாத் என்று இயற்பெயர்கொண்ட ரஜினிக்கு மராத்தியும் கன்னடமும் தெரியும். தனது குழந்தைக்கு மராத்தி மன்னர் சத்ரபதி சிவாஜியின் பெயரை அவரது தந்தை சூட்டியுள்ளார். வருங்காலத்தில் சூப்பர் ஸ்டார் ஆவார் என்பது அப்போதே அவருக்குத் தெரிந்துள்ளது.

பாடசாலை கல்வியை முடித்துவிட்டு, ரஜினி பல வேலைகளை செய்து வந்துள்ளார். கூலி வேலை, தச்சு வேலைகளிலும் ஈடுபட்டுள்ளார். பின்னர்தான், பெங்களூர் போக்குவரத்துத் துறையில் நடத்துநராக வேலைக்குச் சேர்ந்தார். ஆரம்பத்தில் ரஜினி சினிமா உலகில் வில்லனாகவே அறிமுகமானார். 1977ஆம் ஆண்டு 'புவனா ஒரு கேள்விக்குறி' என்ற திரைப்படத்தில்தான் நல்ல கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

அமிதாப் பச்சான் நடித்து வெளியான தீவர், அமர் அக்பர் அந்தோனி, டான் உள்ளிட்ட சுமார் 11 படங்களின் தமிழ் ரீமேக்கில் ரஜினிகாந்த் நடித்துள்ளார். அவை அனைத்துமே சூப்பர் ஹிட் திரைப்படங்களான அமைந்தன.

இந்திய நடிகர்களிலேயே சிபிஎஸ், பாடத்திட்டத்தில் இடம்பெற்ற ஒரே நடிகர் ரஜினிகாந்த் தான். சிபிஎஸ், பாடத்திட்டத்தில் பஸ் நடத்துநர் முதல் சூப்பர் ஸ்டார்வரை என ஒரு பாடமே இவரைப் பற்றி சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2008ஆம் ஆண்டு சிபிஎஸ், பாடத்திட்டத்தின்கீழ் பயிலும் ஆறாம் வகுப்புக்கான ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பற்றி ஒரு முழு பாடம் இடம்பெற்றுள்ளது. அதில், ரஜினி எவ்வாறு நடத்துநராக இருந்து சூப்பர் ஸ்டார் என்ற பட்டம் பெறும் வரை உயர்ந்தார் என்பது குறித்தும், அவரது நண்பரும் பஸ் ஓட்டுநராக இருந்தவருமான ராஜா பகதூர் பற்றியும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில்,

"என் இனிய நண்பர் தமிழ்த் திரையுலக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். நல்ல உடல்நலத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்" என தெரிவித்துள்ளார். இதேபோல் நடிகர் கமல் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "அன்பு நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களுக்கு மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகள். உங்கள் வெற்றிப் பயணம் தொடர இச்சிறந்த நாளில் வாழ்த்துகிறேன்" என தெரிவித்துள்ளார்.

அம்பாறை பிபிலையிலிருந்து மகா ஓயாவிற்கு 5 கஜ முத்துகளை கடத்திய 3 பேர் கைது!

(கனகராசா சரவணன்)

அம்பாறை பிபிலையிலிருந்து மகாஓயாவிற்கு வியாபாரத்துக்காக 5 கஜமுத்துகளை முச்சக்கர வண்டி ஒன்றில் கடத்திச்சென்ற 3 பேரை மகாஓயா நகர்ப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (11) மாலை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்து ஒப்படைத்துள்ளதாக மகாஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் கடற்படை புலனாய்வுப் பிரிவினர் இணைந்து சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை மகாஓயா இலங்கை வங்கிக் கிளைக்கு அருகில் வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது பிபிலையிலிருந்து கஜமுத்துகளை வியாபாரத்துக்காக மகாஓயாவுக்கு முச்சக்கரவண்டி ஒன்றில் கடத்திவந்துள்ள நிலையில், கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் குறித்து முச்சக்கரவண்டியை இடைமறித்து சோதனையிட்ட போது, அதில் கடத்திக் கொண்டுவரப்பட்ட 5 கஜமுத்துகளுடன் 3 பேரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் பிபிலையைச் சேர்ந்த 53, 34, 36 வயதுடையவர்கள் எனவும் இவர்களையும் மீட்கப்பட்ட கஜமுத்துகள் மற்றும் கடத்துவதற்குப் பயன்படுத்திய முச்சக்கரவண்டியையும் மகாஓயா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மீண்டும் ஆபத்தை எதிர்நோக்கும் மாளிகைக்காடு

தற்காலிக தீர்வுகள் பயனற்றுப் போயின!

(மாளிகைக்காடு நிருபர்)

கடல் கொந்தளிப்பால் மீண்டும் பிரச்சினையை சந்திக்கத் தயாராகி வருகின்றது மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி. கடந்த வருடம் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் சுற்றுமதில் முழுமையாக இடிந்து விழுந்து ஜனாஸாக்கள் வெளிவந்துகொண்டிருந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் முயற்சியின் பயனாக பிரதமரின் தலையீட்டினால் ஒரு கோடி நாற்பது இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தடுப்புச்சுவரும் இந்த வருட கடல் கொந்தளிப்பால் பயனற்றுப் போய் கடலரிப்புக்கு இலக்காகி சேதமாகியுள்ளது.

கடல் கொந்தளிப்பிலிருந்து மாளிகைக்காடு ஜனாஸா மையவாடியை பாதுகாக்க நிர்மாணிக்கப்பட்ட அணைக்கட்டுக்கு பக்கத்தில் 10 - 12 அடி ஆழமான பாரிய குழிகள் விழுந்துள்ளதுடன், கடலரிப்பால் கடலைநோக்கி மண் இழுபட்டு சென்றுள்ள தனால் அணைக்கட்டும் பலமிழந்து மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி ஆபத்தை சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை மீண்டும் எழுந்துள்ளது.

மையவாடிக்கு அண்மையிலுள்ள விநாயகர் ஆலயம், பாதுகாப்புப்படை காரியாலயம் போன்றன கடலரிப்புக்கு இலக்காகியுள்ளது. இது விடயம் தொடர்பில் அரச அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மீனவர்களின் மீன்பிடிப் படகுகளும், வள்ளங்களும் நிறுத்தஇடமின்றி வீதிக்கு அருகில் இழுத்து வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதுடன் கொங்கிரீட் வீதிகளும் கடலரிப்பில் உடைந்து கடலுடன் சங்கமித்துள்ளது. அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்கள் முற்றாக கடலரிப்புக்கு இலக்காகியுள்ளமை இங்கு கவனிக்கப்படவேண்டியுள்ளது.

மருதமுனை பகுதியில் அளவை/நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடல்

(அம்பாறை நிருபர்)

அம்பாறை மாவட்ட வெயலகத்தின் அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினதும் பிரிவினரால் பல்வேறு தராக்களை பரிசோதனை செய்து சரிபார்த்து சான்றிதழ் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கல்முனை பிராந்திய செயலகத்திற்குட்பட்ட கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேச வியாபாரிகளின் நிறுவை/அளவை உபகரணங்களை 2022/2023ஆம் ஆண்டுக்கு சரிபார்த்து முத்திரை பதிப்பதற்கென நேற்று (12) மருதமுனை கலாசார மண்டபத்தில் இடம்பெறுகின்றது.

மேலும் இன்றும் (13) நாளையும் (14) ஆகிய திகதிகளில் காலை 9.30 - 3.30 மணிவரை மருதமுனை கலாசார மண்டபத்தில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறித்த வியாபாரிகள் தங்களுடைய வியாபார அளவை - நிறுவை உபகரணங்களை கொண்டுசென்று முத்திரையிட்டுக்கொள்ளுமாறு கல்முனை பிரதேச செயலாளர் அறிவித்தல் விடுத்துள்ளார்.

இதன்போது இலத்திரனியல் தராசுகள், பாரம்பரிய தராசுகள், நிறுக்கும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு அளவீட்டுகள் கூடிய தராசுகள் சரிபார்க்கப்பட்டு, சீல் செய்யப்பட்டு தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

தராசுகளின் வகைகளுக்கேற்ப தராசுகள் இனங்காணப்பட்டு இச்செயற்பாடுகள் தரிதப்படுத்தப்பட்டு வருவதுடன், வர்த்தகர்கள் மீனவர்கள் உள்ளிட்டோர் ஆர்வத்துடன் தத்தமது அளவீட்டு தராசுகளுக்கான தரச் சான்றிதழ்களை பெற்று வருகின்றனர்.

மேலும் தராசுகளை பரிசோதனை செய்து சரிபார்க்கும் சான்றிதழ் இன்றி பல வியாபாரிகள் மோசடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவது தொடர்பிலும் மக்களினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, அளவீட்டு தராசுகளுக்கான தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினதும் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போடியார் புலம்பல்!

தேர்தல் ஒன்றுதான் உடனடித் தேவையாம் எண்டு ரெலிபோன் எதிர்க்கட்சித் தலைவர் சஜீத் தம்பி சொல்லியிருக்காரு எலுவா?

மக்களுக்கு உணவை விட தேர்தல்தான் உடனடி நிவாரணம் எண்ட மாதிரி இவரிட கத இருக்கு எலுவா?

தேர்தல் ஆணைக்குழு தலைவரே பேய் அறைஞ்சவன் மாதிரி நிக்கிறார் மறுகா ஆராம் கெதியா தேர்தல நடத்தப்போறாங்க.

வாழைச்சேனை மீனவர்கள் சென்ற படகு ஹம்பாந்தோட்டை ஆழ்கடலில் விபத்து!

ஒருவர் மீட்பு இருவர் மாயம்

(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மூன்று மீனவர்களுடன் மீன்பிடிக்கச் சென்ற இயந்திரப் படகு ஒன்று விபத்துக்குள்ளானதாக வாழைச்சேனை துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 2ஆம் திகதி வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மூன்று மீனவர்கள் ஹம்பாந்தோட்டை ஆழ்கடல் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை படகுதியில் மீன்பிடித்து விட்டு வாழைச்சேனை துறைமுகம் நோக்கி புறப்பட்டுக்கொண்டிருந்த படகு கடந்த வெள்ளிக்கிழமை 9ஆம் திகதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

அன்றைய தினம் கடலில் ஏற்பட்ட கொந்தழிப்பு காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக மீட்கப்பட்ட மீனவர் ஒருவர் வாழைச்சேனை துறைமுகத்திற்கு தகவல் வழங்கியுள்ளார்.

தாம் பயணித்த படகு கவிழ்ந்ததில் இரு மீனவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் தெரியவில்லை என்றும் தன்னை ஹம்பாந்தோட்டை மீனவர்கள் காப்பாற்றி அவர்களின் படகில் தற்போது பராமரிப்பில் வைத்துள்ளதாகவும் மீட்கப்பட்ட மீனவர் நேற்று முன்தினம் (11) தகவல் வழங்கியுள்ளார்.

இவ்விபத்தில் காணாமல்போன இரு மீனவர்களையும் தேடும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும், மீட்கப்பட்ட மீனவரை ஊருக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் துறைமுக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

சம்பூரில் ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலை திறப்பு

(மூதூர் நிருபர்)

ஆறுமுகநாவலரின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, ஆறுமுகநாவலர் திருவுருவச் சிலை திறப்பு விழாவும், முத்தமிழ் விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை திருகோணமலை, சம்பூரில் இடம்பெற்றது.

இந்நிகழ்வை சம்பூர் கலாமன்றம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் முதலில் ஆறுமுகநாவலர் திருவுருவச் சிலை திறந்துவைக்கப்பட்டது. அதன்பின்னர் தமிழ் அன்னைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, தமிழ்த் தாய் வாழ்த்து இடம்பெற்றது.

காவடி நடனம், பாடல், வில்லுப்பாட்டு உள்ளிட்ட கலைநிகழ்வுகளும் இடம்பெற்ற துடன், பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் (சிவபூமி அறக்கட்டளை இலங்கை) கலந்து சிறப்பித்தார்.

ஏனைய அதிதிகளாக தவத்திரு அகத்தியர் அடிகள் (குரு முதல்வர் தென்கலை ஆதீனம் - திருகோணமலை), ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத அடிகள் (ஹவாய் ஆதீனம் அமெரிக்கா), சைவப்புலவர் க.வெற்றிவேல் (தொட்டியாரப்பற்று இந்துசமய அபிவிருத்தி ஒன்றிய தலைவர்), சைவப்புலவர் அ.குகராஜா (தொட்டியாரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றிய செயலாளர்) உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்

easthamilan@gmail.com

பாலமுனையில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

ஒரு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பணம் மீட்பு

(கனகராசா சரவணன்)

அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை பிரதேசத்திலுள்ள கஞ்ச வியாபாரி ஒருவரின் வீட்டை நேற்று முன்தினம் (11) இரவு முற்றுகையிட்ட பொலிஸார் அவரை கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சேனவிரத்னவின் ஆலோசனைக்கமைய அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.எம்.பண்டார விஜயதுங்கவின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் வசந்த தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் இரவு குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது கஞ்ச வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 55 வயதுடைய வியாபாரியை கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து 15 கிராம் கேரள கஞ்ச மற்றும் ஒரு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பணத்தையும் மீட்டனர்.



இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு கட்டுமறிவுக்குளத்தில் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாம்!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு நோட்டறிக் கழகம் நடத்திய இலவச மருத்துவ முகாம் கடந்த சனிக்கிழமை(10) மட்டக்களப்பு கட்டுமுறிவுக்குளத்தில் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், நோட்டறிக் கழக அங்கத்தவர்கள், கிராம பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இவ்விலவச மருத்துவ முகாமில் தமது நாட்டப்பட நோய்கள், காய்ச்சல் மற்றும் தோல் நோய்களுக்கான சிகிச்சைகளை இப்பிரதேச பொதுமக்கள் பெற்றுக்கொண்டனர்.

அத்தோடு நோட்டறிக் கழகத்தினரால்

இம்மருத்துவ முகாமில் சிகிச்சைபெற வந்தோருக்கு பல்வேறு உடுதுணிகளும் வழங்கப்பட்டன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்ள வேண்டும்

அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் கோரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற வரவு-செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பின் பின்னர் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் அனுஅனையுடன் எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னர் நாட்டில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இணைந்த வடக்கு கிழக்கிற்குள் சமஷ்டி தீர்வைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் ஜனாதிபதியால் தமிழ்த் தரப்பைச் சந்தித்து பேசுவதற்கான அழைப்பும் விடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இனப்பிரச்சினைகான தீர்வுத்திட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கான தீர்வு தொடர்பில் பேசுவதற்கு முஸ்லிம் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமை எங்கள் மத்தியில் பலதரப்பட்ட சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதென அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கடந்த காலங்களில் நடைபெற்ற இவ்வகை -

இந்திய ஒப்பந்தம் முதல் ஒஸ்லோ மாநாடு வரையிலான இனத்தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தரப்பு புறக்கணிக்கப்பட்டிருந்தமையே இன்றுவரையில் இனப்பிரச்சினை புரையோடிப்போவதற்கு காரணம் என்பதனையும் உரிய தரப்புகள் புரிந்துகொள்ள வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனம், சம்மேளனத் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீனின் தலைமையில் நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசலின் கேட்போர் கூடத்தில் கூடி கலந்துரையாடியதோடு, தீர்மானங்களையும் மேற்கொண்டது.

அதில் எல்லோருக்கும் பொதுவான ஜனாதிபதி நாட்டில் நிலவுகின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முயற்சிக்கும் இவ்வேளையில் தொடர்ச்சியாக இனரீதியிலான நெருக்குதலை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளையும் பேச்சுவார்த்தையின்போது தனித்தரப்பாக கலந்துகொள்ள அழைப்பு விடுக்கவேண்டும் என்பதோடு, எல்லா சமூகங்களும் நிம்மதியாக வாழ்கின்ற சூழலை உருவாக்கும் தீர்வுத் திட்டத்தை முன்மொழிய வேண்டும் என்றும் முஸ்லிம் சமூகத்துக்கான தீர்வுத்திட்ட முன்மொழிவுகளை மேலும் ஆய்வு செய்ய நிபுணத்துவ ஆலோசனைக்குழு ஒன்றினை அமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

FIFA WORLD CUP - 2022

போர்த்துக்கலுக்கு சம்பியன் கிண்ணத்தை வென்றுகொடுக்கும் எனது இலட்சியக் கனவு முடிவுக்கு வந்தது – ரொனால்டோ உருக்கம்

ஆவது பீபா உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் சம்பியன் பட்டம் வெல்லுமென எதிர்பார்க்கப்பட்ட அணிகளில் ஒன்றான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் போர்த்துக்கல் அணி, மொராக்கோவிடம் அதிர்ச்சி தோல்விகண்டு அரையிறுதிக்கு செல்லும் வாய்ப்பை இழந்தது.

மொராக்கோவிடம் தோல்வியடைந்ததை அடுத்து கிறிஸ்டியானோ ரொனால்டோ கண்ணீர் விட்டு அழுதார். இந்நிலையில், தன்னுடைய கனவு நேற்று முடிவுக்கு வந்ததாக கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார். இது தொடர்பான அந்தப் பதிவில், போர்த்துக்கலுக்கு சம்பியன் கிண்ணத்தை வென்று கொடுப்பதே எனது வாழ்க்கையின் மிகப்பெரிய இலட்சியக் கனவாகும். இந்த கனவுக்காக நான் கடுமையாக போராடினேன். துரதிர்ஷ்டவசமாக என்னுடைய கனவு முடிவுக்கு வந்தது.

போர்த்துக்கல் மீதான எனது அர்ப்பணிப்பு ஒருகணமும் மாறவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். 16 ஆண்டுகளுக்கும் மேலாக உலகக்கிண்ணத்தில் எப்போதும் சிறந்த வீரர்களின் பக்கத்திலும் மில்லியன் கணக்கான போர்த்துக்கேயர்களின் ஆதரவிலும் நான் எனது முழுமையான பங்களிப்பை கொடுத்தேன். போர்த்துக்கலுக்கு எனது அர்ப்பணிப்பு ஒருகணமும் மாறவில்லை. எப்போதும் அனைவரின் நோக்கத்திற்காகவும் போராடும் ஒருவனாக இருக்கிறேன். என் சக வீரர்கள் மற்றும் என் நாட்டுக்காக நான் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன்.

இப்போதைக்கு அதிகம் பேச விரும்பவில்லை. ஒரு நல்ல ஆலோசகராக இருந்து ஒவ்வொருவரும் தங்கள் சொந்த முடிவுகளை எடுக்க அனுமதிக்க வேண்டிய நேரம் இது. நன்றி போர்த்துக்கல் - என்று ரொனால்டோ தெரிவித்துள்ளார்.



உலகக்கிண்ணத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த ஊடகவியலாளர் மரணம்

நடப்பு பீபா உலகக்கிண்ணத் தொடரின் போட்டியின்போது பணியாற்றிக்கொண்டிருந்த ஊடகவியலாளர் ஒருவர் மைதானத்தில் சுருண்டு விழுந்து உயிரிழந்துள்ளமை சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஊடகவியலாளரான 48 வயதான கிராண்ட் வஹ்ரி ஆர்ஜெனினா - நெதர்லாந்து போட்டியின்போது லுஸைல் மைதானத்தில் தனது பணியை செய்து கொண்டிருந்தார். அப்போது கிராண்ட் திடீரென கீழே சுருண்டு விழுந்தார். இதையடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், ஏற்கனவே உயிரிழந்தமை தெரியவந்தது. அவரது இறப்புக்குக் காரணம் மாரடைப்பு என தெரியவந்துள்ளது.

கிராண்ட் மரண தகவல் அவரின் மனைவி செலின் கவுன்டர அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. செலின் பிரஞ்ச் தாய்க்கும் இந்திய தந்தைக்கும் பிறந்தவராவார். அதன்படி செலினின் தந்தை தமிழராவார்.

அவரின் ஊர் தமிழகத்தின் ஈரோட்டிலுள்ள கிராமமாகும். அவரின் டுவிட்டர் பதிவில், நான் முழுமையான அதிர்ச்சியில் இருக்கிறேன். என் கணவரின் உதைபந்து குழு குடும்பத்தின் ஆதரவுக்கு மிகவும் நன்றியுள்ளவராக இருக்கிறேன் என பதிவிட்டுள்ளார்.

ஆஸி. அணியிலிருந்து விலகிய ஹேசில்வுட்

தென்னாபிரிக்க அணியுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடருக்கான முதல் போட்டிக்கான ஆஸி. அணியிலிருந்து முக்கிய வேகப்பந்துவீச்சாளர் ஜோஸ் ஹேசில்வுட் விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட மேற்கிந்திய தீவுகள் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்த இரண்டு போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றிபெற்றது. இதன்மின்னர் தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இந்த இரு அணிகளுக்கு இடையேயான 3 போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடர் இரு அணிகளுக்கும் மிக முக்கிய தொடராக பார்க்கப்படுகிறது.

ஏனெனில், இந்தத் தொடர் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர் என்பதால் இந்தத் தொடரை வெல்ல இரு அணிகளும் மிகக் கடுமையாக போராடுவர். இந்நிலையில், இந்த டெஸ்ட் தொடரில் முதல் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடாத அணித்தலைவர் பேட் கம்மின்ஸ் அணிக்கு திரும்புகிறார்.

அதேபோல் காயம் காரணமாக விளையாடாத வேகப்பந்து வீச்சாளர் ஜோஸ் ஹேசில்வுட் அணியில் இடம்பெறவில்லை. இரு அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி பிரிஸ்பேனில் ஆரம்பமாகிறது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

அணித்தலைவர் ஷானக்கவுக்கு அபராதம் விதிப்பு

நடப்பு எல்.பி.எல். தொடரில் தம்புள்ள அவுர அணியின் தலைவராக செயற்பட்டுவரும் தசுன் ஷானக்கவுக்கு போட்டிக் கட்டணத்தில் 40 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி அவர் 3000 அமெரிக்க டொலர்களை அபராதமாக செலுத்தவுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியின் போது நடுவருக்கு எதிராக விதிமுறையை மீறி முரண்பட்ட குற்றச்சாட்டின் காரணமாக இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி 2 தரக்குறைப்பு புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தசுன் ஷானக்க தன்னுடைய குற்றத்தை போட்டி மத்தியஸ்தரிடம் ஒப்புக்கொண்டதன் காரணமாக இந்த மேலதிக விசாரணைகள் அவசியமல்ல எனக் குறிப்பிடப்பட்டு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அல்-ஹில்ம் என்ற சிறப்பை பெற்ற பந்து

பீபா உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி, இறுதி ஆட்டங்களில் பயன்படுத்தப்படவுள்ள உத்தியோகபூர்வ பந்து என்ற சிறப்பை அல்-ஹில்ம் பெற்றுள்ளது.

அடிடாஸ் நிறுவனத் தயாரிப்பான உருவானது அல்-ஹில்ம். அரேபிய மொழியில் அல்-ஹில்ம் என்றால் கனவு என்று அர்த்தமாகும். கணிக்க முடியாத ஒவ் சைட் முடிவுகளை சரியாக மேற்கொள்ளும் வகையில் கனெக்டட் போல் தொழில்நுட்பம் இதில் இடம்பெற்றுள்ளது.

காலிறுதிச் சுற்றுவரை அல்-ரிஹ்லா உத்தியோகபூர்வ பந்தாக பயன்படுத்தப்பட்டது. எந்த நிலையில் வீரர் ஆடுகிறாரோ வீடியோ காட்சிகள் போன்றவை தெளிவாக அறிய முடியும். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் அல்-ஹில்ம் பந்து தயாரிக்கப்பட்டுள்ளது. டோஹா நகரை சுற்றியுள்ள பாலைவனத்தைக் குறிக்கும் வகையில் தங்க நிறம் இதில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை நீச்சல் சம்பியன்ஷிப் – 2022

நெஸ்லே மைலோவின் அனுசரணையில் இலங்கை பாடசாலைகள் நீர் விளையாட்டு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 47ஆவது வருடாந்த இலங்கை பாடசாலைகளின் நீர் விளையாட்டு சம்பியன்ஷிப் போட்டிகள் கடந்த புதன்கிழமை முதல் கொழும்பு சுகததாச நீச்சல் தடாகத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் போட்டியின் மூன்றாம் நாள் முடிவுகள் வெளியாக்கியருகின்றன. அதனடிப்படையில் மகளிருக்கான 12 வயதுக்குட்பட்ட 50 மீற்றர் பெக்ஸ்ரோக் நீச்சலில் ஹெசாரா டி சில்வா முதலிடத்தைக் கைப்பற்றினார். மகளிருக்கான 14 வயதுக்குட்பட்ட 50 மீற்றர் பெக்ஸ்ரோக் நீச்சலில் வந்தனி பொன்னாம்பே முதலிடத்தைக் கைப்பற்றினார். ஆடவருக்கான 20 வயதுக்குட்பட்ட 400 மீற்றர் சுதந்திர நீச்சலில் அனுசர அபேகுணவர்தன முதலிடத்தைக் கைப்பற்றினார்.

ஆடவருக்கான 20 வயதுக்குட்பட்ட 50 மீற்றர் பிளை நீச்சலில் டி.கேஜி.சிவா முதலிடத்தையும், மகளிருக்கான 18 வயதுக்குட்பட்ட நீச்சலில் கிறிஸ் பவித்ரா முதலிடத்தையும் கைப்பற்றினர். குறித்த பாடசாலை நீச்சல் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் 200இற்கும் மேற்பட்ட பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 5000 போட்டியாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

Nestlé MILO

சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை இங்கிலாந்திடம் பறிகொடுத்த பாகிஸ்தான்

கற்றுலா இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியில் 26 ஓட்டங்களினால் த்ரில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி இன்னும் ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் தொடரை வென்றது.

முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றிருந்த நிலையில், இரண்டாவது போட்டி கடந்த வெள்ளிக்கிழமை முல்தானில் ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸுக்காக 281 ஓட்டங்களை சேர்த்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் ஆடிய பாகிஸ்தான் அணி 202 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸில் ஆடிய இங்கிலாந்து அணி 275 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழக்க, பாகிஸ்தான் அணிக்கு வெற்றியிலக்காக 355 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. குறித்த இலக்கை நோக்கி பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி, நேற்றையை போட்டியின் நான்காவது நாள் ஆட்டத்துடன் சகல விக்கெட்டுகளையும் இழந்து 328 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கராச்சியில் ஆரம்பமாகிறது.

மே.இ. தீவுகளை அசால்டாக வீழ்த்தி தொடரை வென்ற ஆஸி.

மேற்கிந்திய தீவுகளுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 419 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டிய அவுஸ்திரேலிய அணி தொடரையும் 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 511 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது. பதிலுக்கு மேற்கிந்திய அணி முதல் இன்னிங்ஸில் 214 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலிய அணி 2ஆவது இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதன்படி மேற்கிந்திய அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 497 ஓட்டங்கள் எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், அவ்வணி 77 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இது அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் மேற்கிந்திய அணி பெற்ற 2ஆவது ஆகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும். குறித்த போட்டியின் ஆட்டநாயகனாக ட்ரேவிஸ் ஹெட் தெரிவாக தொடரின் நாயகனாக மார்னஸ் லுஸ்சேன் தெரிவானார்.

இன்றைய போட்டிகள்

தம்புள்ள அவுர VS கண்டி பல்கொன்ஸ்
மாலை 3.00 மணி

கொழும்பு ஸ்டார்ஸ் VS கோல் க்ளாடியேட்டர்ஸ்
இரவு 7.30 மணி

இன்றைய அரையிறுதி ஆட்டம்

ஆர்ஜென்ரீனா VS குரோஷியா
நள்ளிரவு 12.30 மணி
லூசைல் ஸ்டேடியம்

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7